மலர் 2 • இதழ் 9 • ஜனவரி 2018 • ரூ.15/-

AGARAM FOUNDATION
அறம் செய விரும்பு

# யாதும்

நமது கல்வி - நமது சூழல் - நமது பணி

## குழந்தைகளுக்கான கதைகளும் பெரியவர்களுக்கான நீதிகளும்

## கல்விச்சூழலையும் சுற்றுச்சூழலையும் மாற்றுவோம்!

## பிளஸ் 2–வுக்குப் பிறகு...

இரண்டு புதிய தொடர்கள் ஆரம்பம்!




ஒரு வேளை
மிஸ் பண்ணிணாலும்...
டீல் பண்ணணும்.........
அதுதான் சக்தி மசாலா !
I FOOD
சக்தி மசாலா ...
அன்பின் சுவையான
அடையாளம் ...
SAKTHI
RASAM POWDER
ரசப் பொடி
SAKTHI
KULAMBU CHILLI POWDER
SAKTHI
SAMBAR POWDER
சாம்பார் பொடி
சக்தி ®
மசாலா
சக்திமசாலா பிரைவேட் லிமிடெட்
6, மாமரத்துப்பாளையம், ஈரோடு - 638 004.
போன் : 0424 - 2533601.
E-mail : headoffice@sakthimasala.co.in
www.sakthimasala.com
SAKTHI
Refined Sunflower Oil
Sunflower Cooking Oil
SAKTHI
CUT MANGO PICKLE
• சக்தி மசாலா சமையல் பொடி வகைகள் • சக்தி ஊறுகாய் வகைகள் • சக்தி சன் பிளவர் ஆயில் • சக்தி பருப்பு வகைகள்
• சக்தி பஜ்ஜி போண்டா மாவு • சக்தி ராகி மாவு • சக்தி கடலை மாவு • சக்தி அப்பளம் • நெய்

ENGINEERING | ARCHITECTURE | DENTAL | RESEARCH | ARTS & SCIENCE

# YOUR CAREER BEGINS WITH US






## COURSES AVAILABLE

Aeronautical | Automobile | Bioinformatics | Biomedical | Biotechnology | Chemical | Civil | Computer Science and Engineering | Electrical and Electronics | Electronics and Communication | Electronics and Telecommunication | Electronics and Instrumentation | Information Technology | Mechanical | Mechanical and Production | Bachelor of Architecture (B.Arch.) | Bachelor of Dental Surgery (BDS)

100% PLACEMENT OPPORTUNITY

ADMIRABLE INFRASTRUCTURE

WORLD CLASS ACADEMIC AMBIENCE

EMINENT FACULTY

**SATHYABAMA UNIVERSITY**

(Established under section 3 of the UGC Act, 1956)
Declared as Category " A " University by MHRD, Government of India

facebook.com/SathyabamaUniversityOfficial

Email: entranceexam2016@sathyabamauniversity.ac.in | www.sathyabamauniversity.ac.in

Jeppiaar Nagar, Rajiv Gandhi Salai, Chennai - 600 119.

Phone : Administrative Office: 044-2450 3150 / 51 / 52 / 53 / 54 / 55 | Entrance Exam Office: 044-24502436 | Fax : 044 - 2450 2344

# கல்விச்சூழலையும் சுற்றுச்சூழலையும் மாற்றுவோம்!



**அனைவருக்கும் அன்பு வணக்கம்.**

காலம்தான் அனைத்தையும் தீர்மானிக்கிறது. காலம் அறிந்து செய்கிற செயல்களே, நல்ல பலன்களை அளிக்கின்றன. இன்றைய காலகட்டத்தில் உணவு, உடை மற்றும் இருப்பிடம் போலவே கல்வியும் ஒரு மனிதனின் அடிப்படைத் தேவையாகிவிட்டது. நம் குழந்தைகளுக்கு எவ்வளவு சொத்து சேர்த்துவைத்தாலும், நல்ல சுற்றுச்சூழலோ, நல்ல தண்ணீரோ, நல்ல உணவோ கிடைக்காத இடத்தில், நம் குழந்தைகள் மகிழ்ச்சியாக வாழ முடியாது. கல்வியறிவு இல்லாது போனால், நிம்மதியாக வாழ முடியாது.

இன்றைய காலகட்டத்தில், நம்முடைய பிள்ளைகளுக்கு நாம் வழங்கவேண்டியது தரமான கல்வியும், ஆரோக்கியமான சுற்றுச்சூழலும்தான். தமிழில் ‘அடிமடியில் கை வைக்கக்கூடாது’ என்ற எச்சரிக்கை வாசகம் உண்டு. தினம் ஒரு பொன்முட்டை இடுகிற வாத்தின் வயிற்றை அறுத்து, உள்ளே இருக்கிற எண்ணற்ற பொன் முட்டைகளை எடுத்துக்கொள்ளலாம் என்கிற பேராசை, முட்டாள்தனத்தின் உச்சம். கல்வியையும் சுற்றுச்சூழலையும் நாம் கிட்டத்தட்ட ‘அடிமடியில் கைவைத்த’ நிலைக்குக் கொண்டு வந்துவிட்டோம்.

சமுதாயத்தில் நிலவுகிற ஏற்றத்தாழ்வுகளை உடைத்து, ‘அனைவரும் சமம் என்கிற சமத்துவ சமுதாயத்தைக் கல்வி



மூலம் கொண்டுவந்துவிடமுடியும்' என்று மாற்றத்தை விரும்பிய அனைவரும் முன்மொழிந்தார்கள். ஆனால், பணம் இருக்கும் குழந்தைக்கு ஒரு கல்வி, பணம் இல்லாத குழந்தைக்கு ஒரு கல்வி என்கிற அவலமான நிலையை நம்மால் இன்றுவரை மாற்றமுடியவில்லை. பிரிவினைகளைப் போக்கவேண்டிய கல்வியையே மிகப்பெரிய பிரிவினையை வளர்க்கும் கருவியாக மாற்றுவது என்பது 'அடிமடியில் கைவைப்பது' அல்லாமல் வேறென்ன?

அதுமட்டுமில்லை. 'கல்வி என்பது வேலைக்குச் சென்று பணம் சம்பாதிக்கப் பயன்படுகின்ற ஒரு கருவியாக மட்டுமே பார்க்கப்படுகிறது. இப்படிப்பட்ட சமூக அமைப்பில், எதிர்காலத்தின் தேவைகளை உணர்ந்து, கடந்த காலத்தின் தவறுகளைத் திருத்தி, நிகழ்காலத்தில் செய்யவேண்டிய பணிகளைத் திட்டமிடுவதற்கு நேரமில்லாமல் ஓடிக்கொண்டிருக்கிறோம். 24 மணி நேரத்தில், 20 மணி நேரம் குழந்தைகளின் எதிர்காலத்துக்காக உழைத்துக்கொண்டிருப்பதாகச் சொல்கிற பெற்றோர்களில் பலர், தங்களுடைய குழந்தைகள் சுவாசிப்பதற்குத் தூய்மையான காற்றைக்கூட விலைகொடுத்து வாங்கவேண்டிய காலம் ஒன்று விரைவில் வரப்போவதை உணரவில்லை. நம் தேசத்தின் தலைநகரமாக விளங்கும் டெல்லியில் வசிக்கிற குழந்தைகளுக்கு, காற்று மாசு காரணமாக சுவாசக்கோளாறுகள் அதிகமாகி வருவதை செய்திகளில் பார்க்கமுடியும். மூக்கையும் வாயையும் மூடிக்கொள்ள 'மாஸ்க்' அணிந்து பள்ளிகளுக்குப் போகிற குழந்தைகளைப் பார்த்தேனும், அவர்களின் எதிர்காலத் தேவை எது என்பதில் நமக்குத் தெளிவு கிடைக்கவேண்டாமா?

'சமூக மாற்றத்தை உருவாக்க கல்வியே தலைசிறந்த ஆயுதமாக அமையும்' என்கிற உறுதியான நம்பிக்கையில் தொடங்கப்பட்டது அகரம் ஃபவுண்டேஷன். 2015 டிசம்பரில் சென்னையை மூழ்கடித்த மழை வெள்ளத்தைப் பார்த்தபிறகு, அகரம் ஃபவுண்டேஷன் தன்னுடைய பணிகளில் சுற்றுச்சூழலையும் ஒரு பகுதியாக இணைத்துக்கொண்டது. 'நமது கல்வி, நமது சூழல்' என்கிற சிந்தனையோடு, தன்னால் முடிந்த சிறுபங்களிப்பைத் தொடர்கிறது அகரம் ஃபவுண்டேஷன்.

சுற்றுச்சூழலுக்கான பிரத்யேகப் பத்திரிகையாக 'யாதும்' இதழ் தொடங்கப்பட்டாலும், சூழலியல் கருத்துகளோடு, கல்வி பற்றிய ஆரோக்கியமான உரையாடலையும் முன்னெடுக்கவேண்டிய அவசியம் இருப்பதை உணர்ந்தே இருக்கிறது அகரம். இரண்டு செயல்பாடுகளுக்கும் தனித்தனியாக பத்திரிகைகள் நடத்துவதைவிட, கல்வி மற்றும் சூழல் குறித்த மாற்றத்துக்கான உரையாடலை 'யாதும்' இதழின் மூலமாக முன்னெடுக்கவேண்டும் என்று நினைக்கிறோம். 'மாற்றம் ஒன்றே மாறாதது' என்பதை அறிந்து, காலத்திற்கேற்ற மாற்றத்தை உள்ளடக்கி அடுத்தகட்டத்தை நோக்கி நகர வேண்டும் என்பதை உணர்ந்து, 'யாதும்' இதழ் இப்போது புதிய மாற்றங்களுடன் மலர்கிறது.

2018–ம் ஆண்டின் தொடக்கம்முதல், நம்நாட்டின் கல்விச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் குறித்த ஆக்கப்பூர்வமான சிந்தனைகளைத் தாங்கி 'யாதும்' இதழ் வெளிவரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். இந்த இரண்டு துறைகளிலும் அக்கறை காட்டும் அனைத்து தரப்பினரும் பங்கேற்கும்வகையிலும், இந்தத் துறைகளில் நிகழவேண்டிய மாற்றங்கள் மற்றும் முன்னேற்றங்கள் பற்றி நினைவூட்டும் வகையிலும், அதற்காக உழைப்பவர்களை அடையாளப்படுத்தும் வகையிலும் இனி 'யாதும்' இதழ் விளங்கும். முதல் இதழில்தொடங்கி, தொடர்ந்து ஆதரவையும் வரவேற்பையும் வாழ்த்தையும் அளித்துவரும் அனைவருக்கும் நன்றிகள். இணைந்து சிந்திப்போம்; இணைந்து செயல்படுவோம்.

**அனைவருக்கும் பொங்கல் திருநாள் நல்வாழ்த்துகள்.**

அன்புடன்,

**சூர்யா.**


யாதும்
நமது கல்வி - நமது சூழல் - நமது பணி

தமிழ் மாத இதழ்
மலர் 2 • இதழ் 9
ஜனவரி 2018

கௌரவ ஆசிரியர்
**திரு.சூர்யா**

பதிப்பாளர் - ஆசிரியர்
**த.செ.ஞானவேல்**

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:
தரு மீடியா (பி) லிட்.,
10/55, ராஜு தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033
தொலைபேசி : 9952920801



இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.



Published by T.J.Gnanavel,
on behalf of
Tharu Media (P) Ltd.,
10/55,Raju Street,
West Mambalam,
Chennai - 600 033.
email:
contactyadhum@gmail.com

# குருந்து மரம்

**atalantia monophylla**

'இதுவென் புகுந்ததிங் கந்தோ!
இப்பொய்கைக் கெவ்வாறு வந்தாய்
மதுவின் துழாய்முடி மாலே
மாயனே எங்க ளமுதே
விதியின்மை யாலது மாட்டோம்
வித்தகப் பிள்ளாய் விரையேல்
குதிகொண் டரவில் நடித்தாய்
குருந்திடைக் கூறை பணியாய்'

– 'நாச்சியார் திருமொழி'யில் ஆண்டாள் இப்படிப் பாடுகிறார். பொய்கையில் பெண்கள் நீராடிக்கொண்டிருக்க... அங்கு வந்த கண்ணன், அவர்களுடைய உடைகளை எடுத்து 'குருந்து' மரத்தின் இடையே ஒளித்து வைத்துவிடுவதாகப் பாடுகிறார் ஆண்டாள்.



**பேராசிரியர் நரசிம்மன்**
**சென்னை கிறித்துவக் கல்லூரி தாவரவியல் துறை**

வைணவ ஆண்டாள் மட்டுமல்ல, சைவம் வளர்த்த மாணிக்கவாசகரும் 'குருந்து' மரம் குறித்து பாடியிருக்கிறார். திருப்பெருந்துறை ஆவுடையார் கோயில் தலமரமாக உள்ள 'குருந்து' மரத்தின் அடியில் சிவபெருமான் குருவாக எழுந்தருளி, மாணிக்கவாசகருக்கு சிவஞான போதம் போதித்ததாக பாடல் இயற்றப்பட்டிருக்கிறது.

சங்க இலக்கிய 'அகநானூறு' பாடல்களிலும் 'குருந்து' மரத்தின் வெண்கொத்து மலர்கள் போற்றிப் பாடப்பட்டுள்ளன. சங்க கால மக்களின் வாழ்வியலோடும் ஆன்மிக மரபோடும் காலம்தோறும் பாடப்பட்ட மரமான குருந்து, தாவரவியலில் எலுமிச்சை குடும்பத்தைச் சேர்ந்த மரம்! கொத்தான வெண்ணிற மலர்களையும் உருண்டை வடிவக் காய்களையும் உடைய முள்ளுள்ள எலுமிச்சை இன மரம் இது. எலுமிச்சை, ஆரஞ்சு, நார்த்தை, கருவேப்பிலை, குருந்து ஆகியவை Rutaceae எனும் குடும்பத்தைச் சேர்ந்தவை.

இது குருந்தம், காட்டுக் கொளுஞ்சி, காட்டு எலுமிச்சை, காட்டு நாரங்கம் என்றும் சொல்வார்கள். இதில் சிறு குருந்து, பெருங்குருந்து என்னும் இரண்டு வகைகள் தமிழகத்தில் காணப்படுகின்றன. வறண்ட காடுகளில் குறுமரமாக வளரக்கூடியது இந்த மரம். இலைகள் தடிமனாக இருக்கும்; இலைகளில் சிறு பிளவு இருக்கும். மரத்தின் கிளைகளில் ஆங்காங்கே முள் இருக்கும்.

பச்சைப் பசேல் இலைகளைக் கொண்ட குருந்து மரம், இலக்கிய வர்ணைகளை சொன்னதுபோல் வெண்மையான கொத்து மலர்களைக்கொண்டது. மலர்கள் மணம் வீசும். எலுமிச்சை குடும்ப மரங்களின் இலைகளைப் போல குருந்து மரத்தின் இலைகளையும் கசக்கினால் மணம் வரும். குருந்து இலைகளை ஆடு, மாடுகள் உண்ணாது. ஜூன், நவம்பர் மழைகளுக்குப்பிறகு குருந்து பூக்கும். அதன்பின் காய்கள் சிறு சாத்துக்குடி







போல காய்க்கும். கசப்புத் தன்மையுடைய காய்கள் இவை. வௌவால்கள் இந்தப் பழங்களை விரும்பி உண்ணும். மெதுவாக வளரக்கூடிய மரம் இது.

பாரம்பரிய மருத்துவத்தில் குருந்து பயன்மிக்கது. இதன் பழச்சாறுடன் வெடி உப்பு சேர்த்து பூசிக் குளித்தால் தோல் நோய்கள் குணமாகும். பழச்சாறுடன் உப்பு போட்டு குடிப்பது வயிற்று கடுப்புக்கு மருந்தாகும். குருந்து பழச்சாறுடன் தேன் கலந்து அருந்துவது இருமலைப் போக்கும். இதன் தோலை எண்ணெயுடன் காய்ச்சி, நமைச்சல் உள்ள இடங்களில் தடவினால் பலன் தரும். எலுமிச்சை குடும்ப பழங்களுக்கே உரித்தான சிறப்புப் பண்பு இது. அதுபோல இதன் இலைகளுக்கும் தோல் நோய்களைக் குணப்படுத்தும் பண்பு உண்டு.

இதன் இலைகளையும் விதைகளையும் பிழிந்து எடுக்கப்படும் எண்ணெய், பூஞ்சைத்தொற்று நோய்களுக்கு நல்ல மருந்து. மூட்டுவலி இருப்பவர்கள் இதைத் தேய்த்தால் பலன் கிடைக்கும்.




குருந்து மரத்தை அழகு மரமாக வளர்க்க முடியாது. என்றாலும், சமூகக் காடுகள், வறண்ட புறம்போக்கு நிலங்களில் காடு உருவாக்கத்துக்குக் குருந்து மரம் உதவும். குருந்து பழங்களை விரும்பி உண்ண வௌவால்கள் வரும். அதன்மூலம் காடு பரவல் நடக்கும். அந்த வகையில் குருந்து மரம் மருத்துவப் பயனும் சூழலியல் முக்கியத்துவமும் வாய்ந்ததாக உள்ளது.

திருப்பெருந்துறை எனும் ஆவுடையார் கோயிலின் தலமரம் குருந்த மரமாகும்.

– மு.வி.நந்தினி


# உங்கள் வீட்டுக்கே வர வேண்டுமா?

AGARAM FOUNDATION யாதும் நமது கல்வி - நமது சூழல் - நமது பணி

## சந்தாதாரர் ஆகுங்கள்!

| | | | |
|---|---|---|---|
| பெயர் | | | |
| முகவரி | | | |
| தொலைபேசி | | அலைபேசி | |
| மின்னஞ்சல் | | | |

டிக் செய்யவும்

☐ ஓர் ஆண்டு ரூ.150

☐ இரண்டு ஆண்டுகள் ரூ.300

காசோலை / வரைவோலை மூலம் அனுப்பலாம். YADHUM என்ற பெயரில் செக்/ டி.டி. அனுப்பவும். பின்புறம் உங்கள் பெயர், ஊர் எழுதவும்.

இப்படிவத்தை நிரப்பி செக்/ டி.டி.யுடன் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்:

**யாதும்**
தரு மீடியா (பி) லிட்.,
10/55 ராஜு தெரு, மேற்கு மாம்பலம்,
சென்னை- 600 033. போன்: 99529 20801
email: contactyadhum@gmail.com



# வீணாகும் உணவு!

உலகிலேயே பட்டினியில் தவிக்கும் ஏழை மக்கள் அதிகம் இருக்கும் நாடு இந்தியாதான். இந்தியர்கள் அத்தனை பேரும் சாப்பிட முடிவதற்கு அதிகமாகவே இங்கு உணவு உற்பத்தியாகிறது. எனினும், 19 கோடியே 40 லட்சம் இந்தியர்கள், சாப்பிட எதுவும் இல்லாமல் வெறும் வயிற்றோடு தினமும் உறங்கச் செல்கிறார்கள்.

பட்டினியில் தவிக்கும் மக்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டு ‘உலக பட்டினிக் குறியீடு’ என்ற தரவரிசை வெளியிடப்படுகிறது. 119 நாடுகளைக் கொண்ட இந்தப் பட்டியலில் இந்தியாவின் இடம் 100. பஞ்சத்தில் இருக்கும் ஆப்ரிக்க மற்றும் ஆசிய தேசங்கள்தான் நம்மைவிடக் கீழே உள்ளன.

ஒவ்வொரு நாளும் இந்தியர்கள் வீணாக்கும் உணவின் மதிப்பு, 244 கோடி ரூபாய். ஆண்டுக்கு 88 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்புள்ள உணவு வீணாகிறது. இந்தியாவின் ஒட்டுமொத்த உணவு உற்பத்தியில் சுமார் 40 சதவிகிதம் வீணாகப் போகிறது. இதைக் கொண்டு அத்தனை இந்தியர்களின் பசியையும் தீர்க்க முடியும். ஆனால், இந்த இடைவெளியை ஈடுசெய்ய மக்கள் தயாராக இல்லை.

அத்தனை இந்தியர்களுக்கும் ஓராண்டுக்குத் தேவையான உணவு தானியங்கள், சுமார் 23 கோடி டன். இந்தியாவில் 27 கோடி டன் விளைகிறது. ஆனால், ஒவ்வொரு ஆண்டும் நாம் உற்பத்தி செய்யும் தானியங்களில், அறுவடை நேரத்தில் மட்டுமே ஒரு லட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள தானியங்கள் வீணாகின்றன. சுமார் 2 கோடி டன் அளவுக்குக் கோதுமை வீணாகிறது.

நாம் உண்ணும் உணவைப் போலவே, வீணாக்கும் உணவின்மீதும் அக்கறை செலுத்த வேண்டிய நேரம் இது.

# உலகின் பிரமாண்ட பனிப்படலம்!

ஜனவரி 3-ம் தேதி ஓர் அரிய சாதனையை இந்தியா செய்தது. சுமார் 2,000 கிலோமீட்டர் தூரத்துக்கு வானத்தில் ஒரு பனிப்படலம் பரவியது. மத்திய பாகிஸ்தானில் ஆரம்பித்து, கங்கைச் சமவெளியையும் மூடி, வடகிழக்கு மாநிலமான திரிபுரா வரை பரவியிருந்தது இது. இந்தியா, பாகிஸ்தான், வங்க தேசம் மற்றும் நேபாளம் என நான்கு நாடுகளில் அன்று காலை 9.30 மணிக்கு இது இவ்வளவு தூரத்துக்குப் பரவியிருந்தது. சீனா, இத்தாலி, அமெரிக்கா போன்ற நாடுகளில் இதற்குமுன் பரவியிருந்த பனிப்படலங்களைவிட இது பிரமாண்டமானது. நமது செயற்கைக்கோள் இதைக் கண்காணித்து அளவிட்டது.

கிறிஸ்துமஸ் நாளிலிருந்தே இந்தப் பனிப்படலம் உருவாகத் தொடங்கியது. பீகார் மற்றும் உத்தரப் பிரதேசத்திலிருந்து மெல்லப் பரவி பஞ்சாப்பைத் தாண்டி பாகிஸ்தானை நோக்கி நகர்ந்தது. பிறகு வடகிழக்கு மாநிலங்களுக்கும் விரிவடையத் தொடங்கியது. ஒரே நேரத்தில் இவ்வளவு பெரிய நிலப்பரப்பை பனிமூட்டம் மூடியிருந்தது, பல மோசமான விளைவுகளை ஏற்படுத்தியது.

டெல்லி உட்பட 15 விமான நிலையங்களில் இதனால் விமான சேவை பாதிக்கப்பட்டது. ரயில்களும் மெதுவாக இயக்கப்பட்டன. சாலைகளில் எதுவுமே தெரியாததால், அதிகாலை நேரங்களில் போக்குவரத்து மோசமானது. பகல் நேர வெப்பநிலையும் குறைந்தது.

இந்தப் பனியில் மிக மோசமாக பாதிக்கப்பட்டது, பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸ் நகரம்தான். ஜனவரி 2-ம் தேதி மாலையிலிருந்து, ஜனவரி 3-ம் தேதி மதியம்வரை, எதிரில் வருபவர்கள்கூட தெரியாத அளவுக்கு சாலைகளைப் பனி போர்த்தியிருந்தது.



# இனி குப்பை வேண்டாம்!



மறுசுழற்சி செய்ய முடிகிற குப்பைகளை உலகிலேயே அதிகம் இறக்குமதி செய்யும் நாடாக சீனா இருந்தது. ஆனால், ஜனவரி 1–ம் தேதியிலிருந்து இந்தக் குப்பை இறக்குமதிக்கு சீனா தடை விதித்துவிட்டது.

குப்பை என்றால் இவை எல்லாவற்றையும் குப்பை என ஒதுக்க முடியாது. பயன்படுத்திய பிளாஸ்டிக், ஜவுளித் தொழிலில் வீணாகும் கழிவுகள், அட்டை மற்றும் பேப்பர்கள் என எல்லாம் இதில் அடங்கும். அமெரிக்கா, ஜப்பான், பிரிட்டன் உள்ளிட்ட ஐரோப்பிய யூனியன் நாடுகளிலிருந்து மட்டுமே ஒவ்வொரு ஆண்டும் 7 கோடியே 30 லட்சம் டன் பிளாஸ்டிக் கழிவுகளை சீனா இறக்குமதி செய்யும். இவற்றை மறுசுழற்சி செய்து, வெவ்வேறு பொருட்களைச் செய்யும் தொழிற்சாலைகள் சீனாவில் ஏராளம்.

இப்போது 24 வகை திடக்கழிவுகளை இறக்குமதி செய்யப்போவதில்லை என சீனா முடிவெடுத்துள்ளது. தங்கள் நாட்டில் உருவாகும் பிளாஸ்டிக் உள்ளிட்ட மறுசுழற்சி செய்யமுடிகிற குப்பைகளையே என்ன செய்வது என்று தெரியாமல் தவிக்கும் சூழலில் சீனா இந்த முடிவை எடுத்திருக்கிறது.

இதனால், இந்தக் குப்பைகளை இனி எங்கே அனுப்புவது என்ற கவலையில் பணக்கார நாடுகள் தவிக்கின்றன. குறிப்பாக பிளாஸ்டிக் அவர்களுக்குப் பெரும் பிரச்னையாக உள்ளது. சில நாடுகள் இப்போதே பிளாஸ்டிக் மறுபயன்பாட்டுத் திட்டத்தை அறிவித்துள்ளன. அதாவது, குளிர்பானங்கள் மற்றும் தண்ணீர் பாட்டில் வாங்குபவர்கள், காலி பாட்டில்களைக் குப்பையில் போடாமல், மீண்டும் கடையில் கொண்டுவந்து கொடுத்தால், அவர்களுக்கு விலையில் தள்ளுபடி வழங்கப்படும். இதன்மூலம் அந்த பாட்டில்கள் குப்பைக்குப் போவதைத் தடுத்து, மறுபயன்பாட்டுக்கு எடுத்துக்கொள்ள முடியும்.

சுற்றுச்சூழல் செய்திகள்

ஆனால், பயன்படுத்தவே முடியாத பிளாஸ்டிக் குப்பைகளும் ஏராளமாக சேர்கின்றன. உணவுப்பொருள் அடைத்த கன்டெய்னர்கள், மருந்துக்குப்பிகள் போன்ற அவற்றை அனுப்ப ஏதாவது நாடு சிக்குமா என்று அவர்கள் தேடுகிறார்கள். இந்தியா எச்சரிக்கையாக இருக்கவேண்டிய நேரம் இது.

# புதிதாய்க் கிடைத்த இஞ்சி!



இந்தியாவில் இரண்டு புது இஞ்சி ரகங்களை தாவரவியல் அறிஞர்கள் கண்டுபிடித்துள்ளனர். இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களான நாகாலாந்திலும் மணிப்பூரிலும் இந்தக் கண்டுபிடிப்பு நிகழ்ந்துள்ளது.

இதில் Hedychium chingmeianum என்ற இஞ்சி ரகம் தரையில் கிடைக்கவில்லை. பிரமாண்டமான மரங்களின் கிளைகளில் உள்ள வெடிப்புகளில் ஓர் ஒட்டுண்ணி செடி போல வளர்ந்திருந்தது. சிவப்பு வேர்க்கிழங்குகளோடும், வெள்ளைப் பூக்களோடும் இருந்த இதனை மணிப்பூரில் கண்டறிந்தனர். பாதுகாப்பாக தலைநகர் ஷில்லாங் கொண்டுவந்து, இந்தியத் தாவரவியல் ஆய்வு மையத்தில் நட்டு வளர்த்துவருகின்றனர்.

Caulokaempferia dinabandhuensis என்ற இன்னொரு ரக இஞ்சி, நாகாலாந்தின் மலைக்காடுகளில் கண்டுபிடிக்கப்பட்டது. பாறைப்பிளவுகளில் வளமான மண் இருக்கும் இடங்களில் இது வளர்ந்திருந்தது. நம் ஊரில் வளரும் டிசம்பர் பூ போல பிங்க் நிறத்தில் அழகிய பூக்களோடு காணப்பட்டது இந்தச் செடி.

மணிப்பூரில் கண்டறியப்பட்டது போன்ற இஞ்சி வகைகள் உலகெங்கும் 44 உள்ளன. இவற்றில் 31 வகைகள் இந்தியாவில் வளர்கின்றன. இந்த வகை இஞ்சிகள் அபூர்வ மருத்துவ குணங்கள் கொண்டவை. அதனால், இந்தப்புதிய ரகத்தின் மருத்துவ குணங்களையும் இப்போது ஆராய்ந்து வருகிறார்கள். ●

## இரண்டு புதிய தொடர்கள்

### குழந்தைகளுக்கான கதைகளும் பெரியவர்களுக்கான நீதிகளும்

**– பேராசிரியர் ச.மாடசாமி**

பக்கம் 30

தமிழகத்தின் முக்கியமான கல்விச் சிந்தனையாளர்களில் ஒருவர். அறிவொளி இயக்கத்தில் பணியாற்றியவர். தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் மாநிலத் தலைவராக இருந்தவர். 'வகுப்பறையில் மாணவர்களை எப்படி அணுகுவது' என்பதை பல ஆசிரியர்கள் இவரிடமிருந்தும், இவரின் நூல்களிலிருந்தும் கற்றுக்கொண்டுள்ளனர். 'எனக்குரிய இடம் எங்கே?', 'என் சிவப்புப் பால்பாயிண்ட் பேனா', 'ஆசிரிய முகமூடி அகற்றி' போன்ற இவரின் நூல்கள் கல்வியாளர்கள் மத்தியில் புகழ்பெற்றவை.



### பிளஸ் 2-வுக்குப் பிறகு...

பக்கம் 28

**– கல்வியாளர் நெடுஞ்செழியன்**



கல்வியாளர் நெடுஞ்செழியன், 'டெக்னோகிராட்ஸ் இந்தியா காலேஜ் ஃபைண்டர்' நிறுவனத்தின் நிறுவனர். இந்தியக் கல்வி நிறுவனங்கள் தொடர்பான தகவல்களை விரல்நுனியில் வைத்திருப்பவர். மத்திய அரசின் சி.பி.எஸ்.இ வாரியம், இவரை இந்தியா முழுக்க பள்ளி மாணவர்களுக்கு எதிர்காலக் கல்வி வாய்ப்புகள் குறித்து வழிகாட்டும் ஆலோசகராக நியமித்தது. உயர்கல்விக்கு வழிகாட்ட இதுவரை பல்வேறு பள்ளிகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கருத்தரங்குகளையும், டி.வி-க்களில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகளையும் நடத்தியிருக்கிறார்.



MHRD, Govt. of India, has ranked

# VIT as the best private engineering institution

in the country.

**மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் வி.ஐ.டியை நாட்டின் தலை சிறந்த தனியார் பொறியியல் கல்வி நிறுவனமாக தேர்ந்தெடுத்துள்ளது.**

In a ranking done for the first time ever by the NIRF (National Institutional Ranking Framework) of MHRD, VIT has been ranked 13$^{th}$ overall and 1$^{st}$ among private institutions under ‘Engineering institutions’ category.

VIT has also been ranked 17$^{th}$ overall and 7$^{th}$ among private institutions under ‘Management institutions’ category.

## LEADING IN RESEARCH

**in number of publications**

**By publishing 2233 research articles in Scopus indexed journals in 2015, VIT has surpassed all the other institutions in India**

[Source: Scopus database as on 6.4.2016]

***We thank all our faculty, staff, students, alumni and well-wishers !!***

VIT®
UNIVERSITY
(Estd. u/s 3 of UGC Act 1956)

VELLORE ■ CHENNAI

www.vit.ac.in

VIT - A place to learn; A chance to grow

# ஆச்சரிய உலகம்

- உயரமாகவும், கிளை பரப்பி பிரமாண்டமாகவும் வளரும் கபோக் மரம் (The Kapok tree) ஆப்ரிக்க மழைக்காடுகளில்தான் காணப்படுகிறது.



- உலகின் மற்ற கண்டங்களில் உள்ள மழைக்காடுகளோடு ஒப்பிடும்போது, ஆப்ரிக்க மழைக்காடுகள் வறண்டவை. தென் அமெரிக்காவின் அமேசான் மழைக்காடுகளில் ஆண்டுக்கு 203 செ.மீ மழை பொழிகிறது என்றால், ஆப்ரிக்க மழைக்காடுகளில் 160 செ.மீ மழையே பெய்கிறது.

- நம் ஊரில் வயல்களிலும், தோட்டங்களிலும், கடலோரங்களிலும் தென்னை மரங்கள் இருக்கும். ஆப்ரிக்கக் காடுகளில் அதிகம் இருப்பவை தென்னை மரங்களே!

- ஆப்ரிக்க மழைக்காடுகளில் சுமார் 8,000 தாவர இனங்கள் கண்டறியப்பட்டுள்ளன. நாம் பயன்படுத்தும் பல மருந்துகளின் மூலப்பொருட்கள் இந்தக் காடுகளிலிருந்தே எடுக்கப்படுகின்றன.

- உலகின் பெரிய விலங்கினம் எனக் கருதப்படுவது ஆப்ரிக்க யானை. இவை ஆப்ரிக்காவின் சவான்னா புல்வெளிகளில் வசிக்கின்றன. இவை தவிர, ஆப்ரிக்க காட்டு யானை (African Forest Elephant) என ஓர் இனம் உண்டு. பழங்களையும் மரக்கிளைகளையும் சாப்பிட்டு உயிர் வாழும் இந்த யானைகள், ஆப்ரிக்க மழைக் காடுகளில்தான் உள்ளன. ஆப்ரிக்க யானைகளைவிட இவை சிறியவை.





- ஆப்ரிக்க மழைக்காடுகளின் மதிப்புக்குரிய விலங்கு, மலைக் கொரில்லா. (Mountain gorilla) ஐந்து அடி ஒன்பது அங்குலம் உயரத்துக்கு வளரும் இவை, ருவாண்டா மற்றும் காங்கோ நாட்டுக் காடுகளில் அதிகம் உள்ளன. பிரமாண்டமாக இருந்தாலும் இவை சைவ உணவே சாப்பிடுகின்றன.

- மரங்களில் படரும் கொடி இனங்களும் ஆப்ரிக்க மழைக்காடுகளில் அதிகம். சுமார் 2,500 இனங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

- உலகிலேயே மிக வேகமாக அழிந்துவருபவை ஆப்ரிக்க மழைக்காடுகள்தான். ஒவ்வொரு நொடியிலும், ஒரு கால்பந்து மைதானம் அளவுக்கான காடு அழிக்கப்பட்டு வருகிறது.

- இந்தக் காடுகளில் 70 சதவிகிதம் இடத்தை ஆக்கிரமித்து இருப்பவை மரங்களே. ஆப்ரிக்க மழைக்காடுகளில் 600 வகை மரங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

- ஆப்ரிக்க மழைக்காடுகளின் இன்னோர் அதிசயம், ஆப்ரிக்க பழுப்புக் கிளி (African Grey Parrot). கிளி இனங்களில் மிக அதிகமாகப் பேசுபவை இவைதான். நிறைய வார்த்தைகளை நாம் பேசுவதைப் போலவே பேச முயற்சி செய்யும் இனம் இது. செல்லப்பிராணிகளாக வளர்க்க நிறைய பேர் பிடித்துப் போவதால், இந்தக் கிளி இனம் ஆபத்தில் உள்ளது.





- கறுப்பு கொலோபஸ் குரங்கு (Black Colobus Monkey) என்று ஓர் அரிய குரங்கு இனம். காங்கோ நதியை ஒட்டிய பிரமாண்ட மரங்களின் உச்சியில் இவை வாழ்கின்றன. அப்படியே ஒரு மரத்தின் உச்சியிலிருந்து இன்னொரு மரத்தின் உச்சிக்குத் தாவும். அரிதாகவே இவை தரைக்கு வருகின்றன.

- ஒரு சதுர கிலோமீட்டரில் நூற்றுக்கும் மேற்பட்ட உயிரினங்களைக் காண முடிகிற அளவுக்கு அடர்த்தியாக ஆப்ரிக்க மழைக்காடுகளில் விலங்குகள் வசிக்கின்றன.

- ஆப்ரிக்கக் கண்டத்தின் கிழக்கு, மேற்கு மற்றும் மத்தியப்பகுதிகளில் சுமார் 36 லட்சம் சதுர கிலோமீட்டர் பரப்பில் இந்த மழைக்காடுகள் பரந்து விரிந்துள்ளன.

- மழைக்காடுகளின் பல இடங்களில் மரங்களும் செடிகளும் கொடிகளும் அடர்த்தியாக வளர்ந்திருக்கும். உயர்ந்த மரத்தின் உச்சியில் விழும் மழைத்துளி, ஒவ்வொரு அடுக்காக இறங்கி தரையைத் தொடுவதற்கு 10 நிமிடங்கள் ஆகும் அளவுக்கு அடர்த்தியான காடு இது.

- அதிகபட்சமாக மூன்றே கால் அடி உயரம் மட்டுமே வளரும் 'குள்ள நீர்யானை' (Pygmy Hippopotamus), இந்தக் காட்டின் அரிய விலங்குகளில் ஒன்று. நீர்யானைகள் போலவே குள்ளமாக இருக்கும் இவை, லைபீரியா, சியாரோ லியோன், ஐவரி கோஸ்ட் மற்றும் கினியா ஆகிய நாடுகளில் மட்டுமே வசிக்கின்றன. இரவில் மட்டுமே நீர்நிலைகளின் ஓரமாக நடமாடும் இவற்றை 19-ம் நூற்றாண்டுக்கு முன்பு மனித இனம் அறியவில்லை. இப்போது இவை வெறும் 3,000 மட்டுமே உள்ளன. அதனால் 'அழிந்துவரும் அரிய உயிரினம்' என இது அறிவிக்கப்பட்டுள்ளது.




- உலகில் வேகமாகக் காடுகள் அழிக்கப்பட்டு வரும் பகுதிகளில், மேற்கு ஆப்ரிக்காவும் ஒன்று. 'இதேவேகத்தில் அழிவு தொடர்ந்தால், வரும் 2020-ம் ஆண்டில் இங்கு மழைக்காடுகளே இருக்காது' என கவலைப்படுகிறார்கள் சூழலியல் ஆர்வலர்கள்.




# “மாணவர்களுக்கு அறிவியல்மீதான ஆர்வம் அதிகரித்திருக்கிறது!”

தமிழில் சூழலியல் சார்ந்து எழுதிக்கொண்டிருக்கும் பெரும்பான்மையானவர்கள், ஆர்வத்தின் அடிப்படையில் எழுத வந்தவர்களே. துறை சார்ந்து கல்வி பயின்று, பல மொழிகளில் அறிஞர்கள் எழுதிய அரிய நூல்களையும் படித்து, தாங்கள் பெற்ற பொக்கிஷங்களைத் தமிழுக்குத் தர நினைப்பவர்களை விரல்விட்டு எண்ணி விடலாம்.

அப்படி, மறைந்த தாவரவியல் அறிஞர் பி.எல்.சாமியின் வழியில் தாவரவியல் நூல்களை மட்டுமில்லாமல், சூழலியல் மற்றும் அறிவியல் ஆகிய துறைகள் சார்ந்து எழுதிக்கொண்டிருப்பவர் பேராசிரியர் கு.வி.கிருஷ்ணமூர்த்தி. இவருடைய ‘தமிழரும் தாவரமும்’ நூலை, சூழலியல் எழுத்தில் கிளாசிக் என சொல்லலாம். நாற்பதுக்கும் மேற்பட்ட அறிவியல் நூல்கள் எழுதியிருக்கும் கு.வி.கிருஷ்ணமூர்த்தி, தமிழ் சூழலியல் எழுத்தின் முன்னோடிகள் வரிசையில் வருபவர்.



‘‘திருச்சி அருகேயுள்ள பழூர் என்ற கிராமத்தில் பிறந்தவன் நான். திண்ணைப் பள்ளிக்கூடத்தில் தமிழ்வழியில் படித்தவன். ஏழாம் வகுப்புக்குப் பிறகு சென்னை வந்துவிட்டேன். சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் எஸ்.எஸ்.எல்.சி முடித்தேன். காயிதே மில்லத் கல்லூரி அப்போது ஆண்கள் கல்லூரியாக இருந்தது. அங்கே பி.எஸ்ஸி தாவரவியலும் மாநிலக் கல்லூரியில் எம்.எஸ்ஸி தாவரவியலும் படித்தேன். அப்போது சென்னைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்த பி.எல்.சாமியின் கீழ் ஆய்வு மாணவராக இருந்து பிஹெச்.டி முடித்தேன். பி.எல்.சாமியின் மாணவராக இருந்ததால்தான் தாவரவியல் சார்ந்து எழுதும் ஆர்வமே வந்தது. அவர் தன்னுடைய இறுதிக் காலத்தில், தான்




**பேராசிரியர்**
**கு.வி.கிருஷ்ணமூர்த்தி**
**சூழலியல் எழுத்தாளர்**

விட்டுச்செல்லும் பணிகளைத் தொடரும்படி என்னிடம் கேட்டுக்கொண்டார்.

பிஹெச்.டி முடித்த பிறகு, சென்னைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றத் தொடங்கினேன். பாரதிதாசன் பல்கலைக்கழகம் உருவான 1978–ம் ஆண்டு அங்கு பணியில் சேர்ந்தேன். அதன்பின் தாவரவியல் துறைத் தலைவர் உள்பட பல்வேறு பொறுப்புகளிலும் இருந்துவிட்டு, 2006–ம் ஆண்டு ஓய்வு பெற்றேன்.

நான் ஓய்வுபெற்ற பிறகு பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் சூழலியல் சார்ந்த இதழ் ஒன்றைக் கொண்டுவந்தார்கள். ஆரம்ப காலத்தில் அதன் பொறுப்பாசிரியராகவும் இருந்தேன்.

பிறகு, பி.எல்.சாமியின் பணிகளைத் தொடரும் வகையில் கல்வெட்டியல், அகழ்வாய்வு, பழந்தமிழ் இலக்கியங்கள் ஆகியவற்றிலிருந்து தாவரவியல் தொடர்பான விஷயங்களைத் தொகுக்க ஆரம்பித்தேன். அந்தப் பணியை முடிக்க எட்டு ஆண்டுகள் ஆனது. அதுதான் ‘தமிழரும் தாவரமும்’ என்ற பெயரில் நூலாக பாரதிதாசன் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்டது. பாரதிசாதன் பல்கலைக்கழக வரலாற்றில் ஆறு பதிப்புகள் கண்ட ஒரே நூல் இதுதான். அதற்கு முன்பே தமிழ்நாடு பாடநூல் கழகம், உயர்கல்வி நிறுவனங்களுக்கு சில நூல்களை எழுதியிருக்கிறேன். அவையெல்லாம் மாணவர்களுக்காக எழுதிய பாடநூல்கள். ‘அறிவியல் வரலாறு’ என்னும் நூலை, அறிவியல் பட்டப்படிப்பு படிக்காத மாணவர்களுக்கான பாடநூலாக பாரதிதாசன் பல்கலைக்கழகம் அறிமுகம் செய்தது. இந்த நூல் 65 ஆயிரம் பிரதிகள் விற்பனையாகியுள்ளது. அண்ணா பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் அனந்தகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் இந்த நூலின் பிரதிகளை வாங்கிப் பரிசளித்ததாகக் கூறுவார்கள். இன்றளவும் இந்த நூல் சாதனையாக உள்ளது’’ என்று தன்னைப் பற்றிய நீண்ட அறிமுகத்தோடு நிறுத்தினார் பேராசிரியர் கு.வி.கிருஷ்ணமூர்த்தி.

பேராசிரியர் பணியிலிருந்து ஓய்வுபெற்ற பிறகு, ஏராள மான அறிவியல் நூல்களை எழுதியதோடு மட்டுமல்லாது, நாளிதழ்கள், சூழலியல் இதழ்களில் கட்டுரைகளையும் தொடர்களையும் எழுதியுள்ளார் கிருஷ்ணமூர்த்தி.

‘‘தமிழ்நாட்டுத் தாவரங்கள் பற்றி ஒரு தொடர் எழுதினேன். அழியும் நிலையில் உள்ள தாவரங்களை மீட்பது குறித்து இந்தத் தொடர் விழிப்பு உணர்வை ஏற்படுத்தியதாக வாசகர்கள் பலர் தங்களுடைய கருத்துகளைப் பகிர்ந்துகொண்டார்கள். ஒரு எழுத்தாளனுக்கு இதைவிடவும் பெரிதான மகிழ்ச்சி இருக்க முடியாது. நிறைய மொழிபெயர்ப்புகள் செய்ததால், தாவரவியல் கலைச்சொற்கள் பலவற்றை உருவாக்க முடிந்தது. கிட்டத்தட்ட 18 ஆயிரம் கலைச்சொற்களைத் தொகுத்து, தாவரவியல் கலைக்களஞ்சியத்தை க்ரியா பதிப்பகத்தின் மூலம் நூலாகக் கொண்டுவர இருக்கிறேன். தாவரவியலாளர்கள், எழுத்தாளர்கள் மற்றும் மாணவர்களுக்குப் பயனுள்ள நூலாக இது இருக்கும்’’ என்கிறார் இவர்.

கடந்த பல ஆண்டுகளாகவே பொறியியல், மருத்துவம் போன்ற புரொஃபஷனல் படிப்புகள்மீது அதிக நாட்டம் ஏற்பட்ட காரணத்தால், அறிவியல் பட்டப்படிப்புகளில் ஆர்வம் குறைந்து வந்தது என்கிற கிருஷ்ணமூர்த்தி, ‘‘தற்போது மீண்டும் அறிவியலின்மீது மாணவர்களுக்கு நாட்டம் உண்டாகியிருக்கிறது. தமிழில் அறிவியல் நூல்களை எழுதுகிறவர்களுக்கு போதிய ஊக்கம் கொடுத்தால், நல்லதொரு மாற்றம் உண்டாகும்’’ என்கிறார்.

‘‘இளைய தலைமுறை இப்போது கடினமான நூல்களைப் படிப்பதில்லை. எனவே, எளிமையான நடையில் அறிவியல் நூல்கள் வரவேண்டும். அதே சமயத்தில் அறிவியல் உண்மைகளும் திரிக்கப் பட்டுவிடக்கூடாது. நல்ல கதைகள் மூலமாக அறிவியல் சுவாரசியமாகச் சொல்லப்பட வேண்டும். அறிவியலை ஜனரஞ் சகப்படுத்துவதுதான் என்னுடைய திட்டம். அறிவியலாளர்களுக்கும் சமூகத்துக்கும் இடைவெளி இருப்பது உண்மைதான். அவர்களுக்கு ஒருவித தயக்கம் உள்ளது. அந்த தயக்கத்தை விட்டொழித்து அவர்கள் எழுத முன்வர வேண்டும். பெரும்பாலும் இங்கே அறிவியல் துறை சாராதவர்கள்தான் மக்களிடம் அறிவியலைக் கொண்டுபோகிறார்கள். அறிவியலாளர்களும் தங்களுக்குள்ள சமூகப் பொறுப்பை உணர வேண்டும்’’ என்கிற கிருஷ்ணமூர்த்தி, சமீபத்தில் இந்தியப் பழங்குடியினரின் பாரம்பரிய மருத்துவம் குறித்த ஐந்து தொகுதி நூல்களை ஆங்கிலத்தில் தொகுத்துள்ளார்.

‘‘எனக்கு இப்போது 72 வயதாகிவிட்டது. என்னால் என்ன செய்ய முடியுமோ அதை முடிந்தவரை செய்துகொண்டிருக்கிறேன். தமிழர் மருத்துவ வரலாறு, சடங்குகளில் பயன்படுத்தப்படும் தாவரங்கள் என அடுத்தடுத்த நூல்களுக்காகப் பணியாற்றிக்கொண்டிருக்கிறேன்’’ என உற்சாகமாகச் சொல்லி விடைகொடுக்கிற பேராசிரியர், தன் குடும்பத்துடன் பெங்களூருவில் வசிக்கிறார்.


**– மு.வி.நந்தினி**

# வேகமாகக் கற்றுக்கொள்ள 20 வழிகள்!

பொதுத் தேர்வுக்கு இன்னும் சில வாரங்களே உள்ளன. படிக்க வேண்டியதும், ரிவிஷன் செய்ய வேண்டியதும், புதிதாகக் கற்றுக்கொள்ள வேண்டியதும் ஏராளமாக உள்ளன. 'நேரம் போதவில்லை' என திணற வேண்டாம். சில டெக்னிக்குகள் உள்ளன. அவற்றைப் பயன்படுத்தி மூளையை உடனடியாக சுறுசுறுப்பாக்க முடியும். எதையும் வேகமாக கற்றுக்கொண்டு, ஞாபகத்தில் வைத்திருக்கவும் முடியும்.

- உடற்பயிற்சி செய்வதற்கு முன்பாக கை, கால்களை அசைத்து உடலை 'வார்ம்–அப்' செய்கிறோம் அல்லவா? படிக்க உட்காருவதற்கு முன்பாக மூளைக்கும் இப்படி வார்ம்–அப் அவசியம். அப்போதுதான் மூளை சுறுசுறுப்பாகத் தயாராகும். 50, 49, 48 என ஐம்பது எண்களை பின்னாலிருந்து சொல்வது... அரை நிமிடத்தில் 20 மரங்களின் பெயர்களைச் சொல்வது... இப்படி மூளையை விறுவிறுப்பாக்க நிறைய பயிற்சிகள் உள்ளன.
- தினம்தினம் படிப்பதற்கு டைம்டேபிள் போட்டுக்கொள்ள வேண்டும். எத்தனை மணி நேரம் படிப்பது, என்னென்ன பாடங்களை எப்போது படிப்பது, ஓய்வெடுப்பதற்கான நேரம் எது என எல்லாவற்றையும் டைம் டேபிள் போட்டுக்கொண்டு





செய்ய வேண்டும்.

● வெறுமனே புத்தகத்தைப் பார்த்து படிப்பது என ஒரே மாதிரியான கற்றல் முறையைப் பின்பற்றக்கூடாது. படிப்பது, எழுதிப் பார்ப்பது, படித்த பாடத்தைப் பற்றி நண்பர்களோடு பேசுவது என விதவிதமான கற்றல் முறைகளைப் பின்பற்ற வேண்டும். ஒவ்வொரு முறையிலும் நாம் கற்கும் தகவல்கள், மூளையின் வெவ்வேறு பகுதிகளில் சேமிக்கப்படுகின்றன. வெவ்வேறு முறைகளில் கற்கும்போது, நிறைய விஷயங்கள் ஞாபகத்தில் இருக்கும்.

● ஒரே நேரத்தில் பல வேலைகளைச் செய்யக்கூடிய திறமை சிலருக்கு இருக்கும். ஆனால், கற்றல் விஷயத்தில் இதைச் செய்யக்கூடாது. ஒரு பாடத்தைப் படிக்கிறீர்கள் என்றால், அதில் மட்டுமே கவனம் இருக்க வேண்டும். இல்லாவிட்டால், பாடம் நினைவில் நிற்காது.

● வெறுமனே எழுத்துகளாகவும், ஃபார்முலாக்களாகவும் படிப்பதில் அர்த்தமில்லை. அதை தினசரி வாழ்க்கையில் பொருத்திப் பார்த்தால் ஞாபகத்தில் எப்போதும் நிற்கும். எண்களைக்கூட சம்பவங்களோடு பொருத்திப் பார்த்தால் நினைவிலிருந்து நீங்காது.

● வெறுமனே படித்துக்கொண்டிருந்தால் போதாது. எப்படிப் படித்திருக்கிறீர்கள் என்பதை அடிக்கடி சோதித்துப் பார்க்க வேண்டும். மாதிரித் தேர்வுகள் எழுதிப் பார்ப்பது, யாரையாவது கேள்வி கேட்கச் சொல்லி பதில் சொல்வது என்று படித்ததைத் திரும்பத் திரும்ப நினைவுபடுத்திப் பார்த்தால், அது ஞாபகத்தில் ஆழமாகப் பதியும்.

● குறித்த நேரத்துக்குள் படித்து முடித்தால், மாதிரித் தேர்வு எழுதி நல்ல மதிப்பெண் வாங்கினால், உங்களை நீங்களே பாராட்டிக்கொள்ளுங்கள். ஸ்வீட் சாப்பிட்டு கொண்டாடுங்கள். அப்போது மூளையில் டோபமைன் சுரந்து, நினைவுத்திறனை இன்னும் அதிகமாக்கும்.

● நேரமில்லை என்பதற்காக அடுத்தடுத்து வெவ்வேறு பாடங்களைப் படித்துக்கொண்டே இருந்தால், எதுவுமே நினைவில் இருக்காது. ஒரு பாடத்தைப் படித்ததும், அதை அசை போடுவதற்கு நேரம் ஒதுக்க வேண்டும். மூளைக்கு இந்த நேரம் தேவைப்படுகிறது.

● 45 நிமிடங்கள் படித்தால், ஐந்து நிமிடங்களாவது படிப்பை ஒதுக்கி வைத்துவிட்டு வேறு எதையாவது செய்ய வேண்டும். மூளைக்கு வேலை அதிகமில்லாத எளிமையான விளையாட்டு, பேச்சு என இருக்க வேண்டும். இப்படிச் செய்தால், மூளையின் திறன் மேம்படும்.

● படிக்கும் பாடத்தின் வரிகள் ஞாபகம் இருப்பதில்லை; ஆனால், திரைப்படத்தில் வரும் காட்சிகளும் வசனங்களும் ஞாபகத்தில் இருக்கின்றன. காரணம், அவை காட்சிகளாக மனதில் பதிவதுதான். எனவே, பாடங்களையும் காட்சிகளாக மாற்றி மூளையில் பதிய வைக்கலாம்.

● தொடர்ச்சியாக பல மணி நேரங்கள் ஒரே பாடத்தைப் படித்தால் களைப்பு ஏற்பட்டுவிடும். அதனால் ஒன்றரை மணி நேரத்துக்கு ஒரு பாடம்; அதன்பிறகு சின்ன பிரேக்; பிறகு வேறு பாடம் என படிக்கலாம். வித்தியாசமான வெவ்வேறு பாடங்களைப் படிக்கும்போது ஆர்வமும் இருக்கும்; மூளைக்கும் அயர்ச்சி இருக்காது.

● 'நாம் கற்றதை இன்னொருவருக்குச் சொல்லிக்கொடுக்கும்போதுதான், அது இன்னும் ஆழமாக மனதில் பதிகிறது' என்கிறார்கள் கல்வியாளர்கள். எனவே நீங்கள் படித்த பாடத்தை உங்களின் வார்த்தைகளில் யாருக்காவது சொல்லிக்கொடுங்கள். அப்படி யாரும் கிடைக்கவில்லை என்றால், வீட்டில் இருப்பவர்களை மாணவர்களாக்கி, அவர்களிடம் சொல்லிப் பாருங்கள்.

● நீங்கள் எவ்வளவு சிறப்பாகப் படிக்கிறீர்கள் என்பதில் சூழலும் முக்கியப்பங்கு வகிக்கிறது. சுகாதாரம் இல்லாத, இரைச்சல் நிறைந்த சூழலில் எவ்வளவு ஆர்வமாகப் படித்தாலும் மனதில் ஏறாது. சுத்தமான சூழலில் வசதியாக அமர்ந்து படிக்க வேண்டும். நல்ல காற்றோட்டமான இடமாக அது இருக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் புதிது புதிதான இடங்களில் அமர்ந்து படியுங்கள். எங்கு அமர்ந்து படித்தோம் என்பதை ஞாபகப்படுத்தினால், பாடமும் ஞாபகத்துக்கு வரும்.

● மனதுக்குப் பிடிக்காமல் எதையும் ஈடுபாட்டோடு செய்ய முடியாது. கடினமான பாடமாக இருந்தாலும், 'இது எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது; இதை சந்தோஷமாகப் படிக்கிறேன்' என சிரித்தபடி மனதுக்குள் சொல்லிக்கொண்டு படித்தால், இனிதாக மனதில் பதியும்.

● 'எதற்கும் நேரம் ஒதுக்காமல் படிக்கிறேன்' என புத்தகத்திலேயே மூழ்குவது தவறு. 'தினமும் குறைந்தபட்சம் 15 நிமிடங்கள் ஒதுக்கி உடற்பயிற்சி செய்பவர்களின் மூளை புத்துணர்வோடு இருக்கிறது' என ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன. உடலுக்கும் நேரம் ஒதுக்குங்கள்.

● இரவில் நீண்ட நேரம் கண்விழித்துப் படித்து, தூக்கத்தைத் தியாகம் செய்யாதீர்கள். போதுமான தூக்கம் இருந்தால்தான், மறுநாள் மூளை சுறுசுறுப்பாகத் தயாராகும்.

● தினமும் என்ன செய்தீர்கள் என்பதைப் பற்றி நண்பர்களோடு சில நிமிடங்கள் பேசுங்கள். இது மனதை லேசாக்கி, நினைவுத்திறனை மேம்படுத்தும்.

● தினமும் அதிகாலை தியானம் செய்வதும், யோகா செய்வதும், படித்ததை தேர்வு நேரத்தில் தவறில்லாமலும் தடையில்லாமலும் நினைவுக்குக் கொண்டுவந்து தேர்வைக் கச்சிதமாக எழுத உதவுகிறது.

● நிறைய தண்ணீர் குடியுங்கள்; பழங்கள் சாப்பிடுங்கள்; ஒமேகா 3 கொழுப்பு அமிலம் உள்ள மீன், பட்டாணி, பூசணி விதை மற்றும் வால்நட் போன்றவற்றை சாப்பிடுங்கள். மூளையின் திறனை இவை மேம்படுத்தும்.

● கறுப்பு சாக்லெட் சாப்பிட்டால், மூளையில் டோபமைன் சுரக்கிறது. ஞாபகசக்தியையும் கற்றலையும் மேம்படுத்த இது உதவுகிறது. ஆனால், அளவாக சாப்பிடுங்கள். ●

# வாசிப்பை நேசிப்போம்



“ஒரு கோடி ரூபாய் கிடைத்தால் என்ன செய்வீர்கள்?” என்று காந்தியிடம் ஒருமுறை கேள்வி கேட்கப்பட்டபோது, “ஒரு நூலகம் கட்டுவேன்” என்றாராம் மகாத்மா காந்தி. “தனிமைத்தீவில் தள்ளப்பட்டால் என்ன செய்வீர்கள்?” என்று கேட்டபோது, “புத்தகங்களுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்துவிட்டு வருவேன்” என்றாராம் நேரு. ஒருமுறை லண்டன் சென்றிருந்தபோது, “எங்கே தங்க விரும்புகிறீர்கள்” என்று அம்பேத்கரிடம் கேட்டனர். “எந்த இடம் நூலகத்துக்கு அருகில் உள்ளது?” எனக் கேட்டார் அம்பேத்கர். தூக்கிலிடப்படுவதற்கு முந்தின நிமிடம் வரை வாசித்துக்கொண்டே இருந்தார் பகத் சிங். ஒவ்வொரு படத்திலும் நடிக்க ஒப்புக்கொள்ளும்போது வரும் முன்பணத்தில் முதல் நூறு டாலருக்கு புத்தகங்கள் வாங்குவாராம் சார்லி சாப்ளின்.

‘கற்றது கைம்மண்ணளவு, கல்லாதது உலகளவு’ என்றார் ஔவையார். புத்தகங்களை வாசிக்கவும், வாசிப்பை நேசிக்கவும் செய்யும் சில பொன்மொழிகள்:

“ஒரு புத்தகத்தின் பயனை அதன் உள்ளே தேடாதீர்கள்; அது வெளியே ஏற்படுத்திய தாக்கத்தை வைத்தே அதன் பயன் அளவிடப்படும்”

**– பிரடெரிக் எங்கெல்ஸ்**

“வேறு எங்கோ ஓர் அற்புத உலகில் வசிக்க விரும்பியதற்காக மனித இனம் கண்டுபிடித்தது புத்தகம் மட்டுமே”

**– மார்க் ட்வெய்ன்**

“காலக் கடலில் நமக்கு வழிகாட்ட அமைக்கப்பட்ட கலங்கரை விளக்கு, புத்தகம்”

**– எட்வின் பி.விப்பின்**

“எங்கே நல்ல புத்தகங்கள் எரிக்கப்படுகின்றனவோ, அங்கே நல்ல மனிதர்களும் எரிக்கப்படுவார்கள்”

**– சே குவேரா**

“கரண்டியைப் பிடுங்கிவிட்டு பெண்ணிடம் புத்தகம் கொடுத்தால் போதும்”

**– தந்தை பெரியார்**

“ஒரு புத்தகத்தைத் திறக்கும்போது, உலகை நோக்கிய ஒரு ஜன்னலைத் திறக்கிறோம்”

**– தோழர் சிங்காரவேலர்**

“புத்தகங்கள் மிகவும் ஆபத்தானவை. அவற்றின்மேல் கவனமாக இருங்கள். அவை உங்கள் வாழ்வையே மாற்றிவிடக்கூடும்”

**– எலன் எக்ஸ்லே**

"மொத்த இறந்த காலத்தின் ஆன்மாவும் வசிக்கும் இடம் புத்தகம்"

**– தாமஸ் கார்னைல்**

"உலகிலுள்ள அனைத்துவகை துயரங்களிலிருந்தும் விடுதலை பெறுவதற்கான திறவுகோல் புத்தகங்களில் மட்டுமே உள்ளது"

**– சூகிவா திவாங்கோ**

"யுத்தத்தில் கலந்துகொள்வதைவிட கூடுதல் துணிச்சல், ஒரு சில புத்தகங்களை வாசிக்கத் தேவைப்படுகிறது"

**– எல்பார்ட் கிரிக்ஸ்**

"சொர்க்கம் என்பது ஒரு மிகப்பெரிய நூலகமாகத்தான் இருக்கும் என்று நான் கற்பனை செய்துகொள்கிறேன்"

**– ஜார்ஜ் லூயிஸ் போர்ஜே**

"என்னிடம் கொஞ்சம் பணம் இருந்தால், புத்தகங்கள் வாங்குவேன். அதன்பிறகும் ஏதாவது மிச்சமிருந்தால் உணவும் உடையும் வாங்குவேன்"

**– எராஸ்மஸ்**

"புத்தகங்கள் என்பவை வெறும் கண்ணாடிகள்தான். உங்கள் உள்ளத்தில் ஏற்கெனவே என்ன இருக்கிறதோ, அதையே அவை காட்டும்"

**– கார்லோஸ் சஃபோன்**

"ஒரு நாட்டின் வருங்கால சந்ததியினர் தேடித்தேடி அடைய வேண்டிய அற்புதப் புதையல்கள், புத்தகங்களே"

**– ஹென்றி தொறா**

"நம்மால் வேறு எப்படியும் பயணிக்கமுடியாத உலகத்துக்கு நம்மை அழைத்துச் செல்லும் ஒரு மந்திரக் கம்பளம், புத்தகமே"

**– கரோலின் கோர்டான்**

"ஒரு இன மக்களின் பண்பாட்டை அழிக்க, நூலகங்களை எரிக்கத் தேவையில்லை. மக்களை படிக்கவிடாமல் செய்தாலே போதும்"

**– ரே பிராட்பரி**

"ஒரு குழந்தைக்கு நீங்கள் வாங்கித் தரும் சிறந்த பரிசு, ஒரு புத்தகம்தான்."

**– மார்ட்டின் லூதர் கிங்**

"என்னிடம் ஒரு நல்ல நூலகம் இல்லையென்றால், நான் துயரத்திலும் வறுமையிலும் தவிப்பேன்"

**– ஜேன் ஆஸ்டின்**

"புத்தகங்கள் செய்யும் மிகப்பெரிய மாயம் என்னவென்றால், உங்கள் கால்களை அசைக்காமலே நீங்கள் மாபெரும் பயணம் செய்துவிட முடியும்"

**– ஜும்பா லஹிரி**

"எல்லோரும் படிக்கும் அதே புத்தகங்களை நீங்களும் படித்தால், எல்லோரும் எப்படி சிந்திக்கிறார்களோ, அப்படியேதான் சிந்திப்பீர்கள்!"

**– ஹருகி முரகாமி**

# நம் முன்னோர்களின் ஆசிரியர்கள் யார்?

‘சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பே சங்க இலக்கிய நூல்கள் படைத்த நம் முன்னோர்கள் எப்படிக் கல்வி பயின்றிருப்பார்கள், அவர்களின் ஆசிரியர்கள் யார், எப்படிப்பட்ட கல்வியாக அது இருந்தது?’ போன்ற கேள்விகளுக்கு விடை தரும்விதமாக பேராசிரியர் சேவியர் தனிநாயகம் அடிகளார் 'Tamil Culture' இதழில் கட்டுரைகள் எழுதினார். பண்டைத் தமிழ் இலக்கியங்கள் மூலம் அறியப்படும் தமிழ்க்கல்வி மரபு, பண்டைய கல்வியாளர்கள், சமண மற்றும் பௌத்த மரபுவழி உருவான கல்வி ஆகியவை குறித்து அவர் எழுதிய ஆங்கிலக் கட்டுரைகளை திரு. ந.மனோகரன் தமிழில் மொழிபெயர்த்து நூலாக்கியுள்ளார். இந்த நூல், தமிழர்களின் பெருமிதமான கல்விப் பாரம்பரியத்தை உணர்த்துகிறது.

பழங்கால இந்தியக் கல்விமுறை குறித்து பல ஆய்வுகள் நடைபெற்றுள்ளன. ஆனால், அந்த ஆய்வுகள் எல்லாமே வட இந்தியாவில் நிகழ்ந்தவை. அவர்களின் ஆய்வுகள் எல்லாமே சமஸ்கிருதம் மற்றும் பாலி மொழி இலக்கியங்களைச் சார்ந்தவையாக நின்றுவிடுகின்றன. திராவிட மொழி பேசும் தென்னக மக்களின் இலக்கியங்களை அவை ஏறெடுத்துப் பார்க்கவில்லை.

ஆனால், சந்திரகுப்த மௌரியரும் அசோகரும் பரந்த இந்தியாவை ஆண்ட நேரத்தில், தமிழகம் சங்க காலப் புலவர்களால் நிறைந்திருந்தது. வலிமையும் உறுதியுமான சுதந்திர அரசுகள் தமிழகத்தில் இருந்தன. மொழியும் இலக்கியமும் மேலான வளர்ச்சியை எட்டியிருந்தன. தனித்துவம் மிக்க, வளர்ச்சியடைந்த ஒரு சமூகமாகவே தமிழ்ச் சமூகம் இருந்தது. ‘‘தன்னிறைவும், பண்பாடும், சொல்வளமும் அப்போதே நம் பெரும்சொத்தாக இருந்தன’’ என்கிறார் தனிநாயகம் அடிகளார்.

‘சங்ககாலச் சமூகத்தில் பெற்றோர்களே ஆசிரியர்களாக இருந்தனர். அவர்களோடு பாணர், கூத்தர், புலவரும் ஆசிரியர்களாகச் செயல்பட்டுள்ளனர். குறிப்பாக இரட்டைக் காப்பியங்கள் காட்டுகின்ற தமிழ்ச் சமூகத்தில் வேதப் பிராமணர்களும் சமண பௌத்தத் துறவிகளுமே தமிழகத்தின் முதன்மைக் கல்வியாளர்களாக இருந்துள்ளனர். சங்ககாலத்தின் தொடக்கத்தில் பொதுத்தன்மையும் முறைசாராத் தன்மையும் கொண்டிருந்த கல்வி இருந்தது. பின்னர் அது, சமயம் சார்ந்த முறைசார் கல்வியாக மாறியது. பண்டைய கிரேக்கம், செல்டிக் மற்றும் வட இந்தியாவில் நிலவியிருந்த கல்விமுறைக்கு நிகரான வளர்ச்சியுடன் தமிழகக் கல்வியும் இருந்து வந்துள்ளதை இவ்விலக்கியங்களில் காணலாம். அந்நாடுகளில் நிலவியிருந்த சமூகப் பொருளாதாரத் தேவைகளுக்கேற்ப கல்விமுறையும் வடிவமைக்கப்பட்டிருந்தது. பல சமூகங்களையும் ஆராயும்போது அம்மக்களிடையே கல்விச் சிந்தனைகள் ஒரு சீரான வளர்ச்சி பெற்று வந்திருப்பதைக் காண்கிறோம்’ என்கிறார் நூலாசிரியர்.

மனிதர்களின் வீரதீரச் செயல்களைப் பாடுவோரே முதல் கல்வியாளர்கள் ஆகினர். கல்வி வளர்ச்சியின் இரண்டாம் கட்டத்தை இலக்கியத்தில் பாணர்களின் காலமாகக் கருதலாம். மூன்றாம் கட்டத்தில் பாணர், கூத்தர் போன்றவர்களோடு புலவர்களும் நாட்டின் முதன்மைக் கல்வியாளர்களாக இடம் பெற்றனர். புலவர்கள் தத்துவஞானியராகவும் சமயக்கல்வியாளருமாக செயல்பட்டது, பழங்காலக் கல்வி வரலாற்றின் நான்காம் கட்டமாகும். இந்நான்கு கட்ட வளர்ச்சிகளும் அந்தந்த சமூகத்திற்கேற்ற மாறுதல்களைக் கொண்டிருந்தன.

தமிழ்ச் சமூகத்தின் இரண்டாம் கட்ட கல்வி நிலை பாரம்பரியத் தொழில் வகுப்பினரான பாடகர், கூத்தர், இசைஞர், வாழ்த்துப் பாவிசைக்கும் பாணர் ஆகியோரிடம் வெளிப்படுகின்றது. இப்பாணர்குழுக்கள் தமிழ் நிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் புரவலனைத் தேடி இடம்பெயர்ந்து அலையும் நாடோடி வாழ்வை நடத்தி வந்தன. அவர்கள் வாய்மொழி

மற்றும் வரிவடிவ இலக்கிய வளர்ச்சிக்கும் உதவினர். அதோடு நுண்கலைகளான இசை, நடனம் இவற்றை அன்றைய வெகுமக்களிடம் கொண்டு சேர்த்ததும் அவர்களே.

அடுத்த கட்டத்தில், வளர்ச்சிபெற்ற கல்வி அறிவு கொண்ட சமூகத்தில் புலவர்கள் மிகுந்த மரியாதைக்குரிய ஆளுமைகளாக உருப்பெற்றனர். கவிதை, சிந்தனை, ஆய்வு, நீதியுரைத்தல், வாழ்த்துக்கூறல் என்று புலவர்களின் கைகளில் கல்வி தனித்து ஒதுங்கியது. இக்கட்டத்தில் கற்றலும் செய்யுள் இயற்றலும் முறையான மாணாக்கநிலை வழி கைமாறப்பட்டது. சில நூல்களில் குறிப்பிடப்படும் புலவர்களின் பட்டப்பெயர்கள், அவர்கள் பெருமைமிகு ஆசிரியர்களாக விளங்கியதையும், புகழ்பெற்ற மாணவர்களை அவர்கள் பெற்றிருந்ததையும் காட்டுகிறது.

மனிதன் நிறைவு பெற கல்வி, கேள்வி எனும் இருநிலைகளில் கற்றல் வேண்டும். கல்வி என்பது நேரடியாகவும் தன்னார்வத்துடனும் உள்ளுணர்வுடனும் கற்றலாகும். கேள்வி என்பது பிறரால் வழங்கப்படும் வழிமுறைகள் மற்றும் அறிவுரைகளை ஏற்பதன் மூலம் கற்றலாகும். கேள்வி எனும் சொல் மேலோட்டமாக கேட்டல் என்பதனைக் குறிப்பதுடன் வாய்மொழி மற்றும் செவிப்புலன் சார்ந்த கற்றலின் ஆரம்பங்களையும் வெளிப்படுத்துகிறது. மிகக் கற்றறிந்த புலவர்களும்கூட அவர்களது சமகாலத்தினர்களால் கல்வி, கேள்வி தகுதிகளுக்காகவே ‘கற்றார்’ என்றும், ‘கற்றாரிடம் கேட்டவர்’ என்றும் பாராட்டப்பட்டுள்ளனர்.

கற்றறிந்தார் அவைகளிலும், மன்னரின் அரசவைகளிலும் உள்ள சான்றோர் ஏற்றுக்கொள்ளுமாறு கல்வி, கேள்விகளால் தான் கற்றறிந்தவற்றைத் தெளிவாகவும் பொருத்தமாகவும் தர்க்கச் சொல்லாடலாகவும் எடுத்துரைக்கும் தகுதி பெற வேண்டும். அத்தகுதியை அடையவில்லை எனில், ஒருவர் பெற்ற கல்வியால் பயனேதுமில்லை. அன்று, கல்வி சமூகப்பயன் நோக்கியதாக அமைந்தது. கல்விச் செல்வத்தைச் சேர்க்க பொழுதைச் செலவிடுவதாக இருந்தாலும்கூட, அந்தச் செல்வமும் வேண்டுவோர்க்கு அளித்து தொண்டாற்றுவதற்கே என நியதி இருந்தது.

முறைசார் கல்வியின் உலகளாவிய மதிப்பைக் குறிப்பிடும் தருணங்களில் அடிக்கடி மேற்கோள் காட்டப்படும் பாடலில் முறைசார் கல்வி தன்னறிதலின் அடிப்படையாக ஏற்று உலகம் அங்கீகாரம் அளிப்பதைக் காண்கிறோம்.

‘உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்ற னன்றே
பிறப்போ ரன்ன யுடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலாற் றாயுமனந் திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக வென்னா தவருள்
அறிவுடை யோனா றரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட் படுமே.’

என்ற புறநானூற்றுப் பாடலின் கல்வி, கற்றல் பற்றிய குறிப்புகளிலிருந்தும் தொகைநூற்களில் இடம்பெறும் கல்வி பற்றிய கருத்தாக்கங்களிலிருந்தும் அன்றைய கல்வி சமயம் சார்ந்த கல்வியாக இருக்கவில்லை என்றறிகிறோம்.




கல்வி என்பது, கற்பவனை சான்றோனாக்கியது; அவனை உலக வாழ்வுக்கு தகுதிப்படுத்தியது; கற்றோர் அவையிலும் ஊர்ப்பொது மன்றங்களிலும் முந்தியிருக்கச் செய்தது. அது உலக வாழ்வை மறுதலிக்கும் கல்வி அல்ல. அது வாழும் உலகை அதன் இன்பங்களை உறுதிப்படுத்துவது. மனித ஆற்றலில் விளங்கும் தன்னிறைவைக் காட்டுகிறது. அதில் குழந்தைகளின் மீதான அன்பும், இல்லறத்தின் மீதான பற்றும் மிகவும் உள்ளன.


(பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் கல்வி – சேவியர் தனிநாயகம் அடிகளார், மாற்று வெளியீட்டகம், சென்னை–106.)

# தமிழ் செழிக்க 6 அம்சத் திட்டம்

**டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம்**
முன்னாள் குடியரசுத் தலைவர்

தொழில் புரட்சி முதல் அறிவியல் புரட்சி வரை, அது எந்த மொழியினரால் நடத்தப்படுகிறதோ, அந்த மொழியே ஆதிக்கம் பெறுகிறது. அவ்வாறு ஆதிக்கம் பெறும் மொழி வழக்கு மொழியாக மாறி, அது பின்னர் வாழ்வியல் மொழியாக மாறுகிறது. எனவே, 'தமிழில் பேசலாம், தமிழில் கேட்கலாம், தமிழில் எழுதலாம், தமிழில் படிக்கலாம்' என்ற நிலை மாறி வாழ்வின் அனைத்துத் தேவைகளுக்கும் தமிழைப் பயன்படுத்தலாம் என்ற நிலை என்று வருகிறதோ, அன்றைக்குத்தான் தமிழ் வளரும்.

அதாவது, தமிழர்களின் கல்வி, வேளாண்மை, வணிகம், கலை, தொழில்நுட்பம், மருத்துவம், அறிவியல், மின்னியல், கணிதம், நீதி, வங்கித் துறை செயல்பாடுகள், அரசியல், திரைப்படம், ஊடகங்கள் என அனைத்திலும் தமிழ் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும். இப்படி அதை எல்லாவகைப் பயன்பாட்டுக்கும் கொண்டு வந்தால் மட்டுமே, தமிழ் மேன்மேலும் செழித்து வளரும்.



தமிழ்ப் பல்கலைக்கழகம், தமிழ் மொழி மீது ஆர்வம் உள்ளவர்கள், கல்லூரிகளின் தமிழ்த் துறைத் தலைவர்கள், தமிழ் படிக்கும் மாணவர்கள், தமிழ் ஆர்வலர்கள் ஆகியோர் ஆறு முக்கிய செயல் திட்டங்களைச் செய்ய வேண்டும்.

## என்னென்ன திட்டங்கள்?

- அறிவியல், கணிதம், இயற்பியல், வேளாண்மை, வேதியியல், உயிரியல், மின்னியல், பொறியியல், தொழில்நுட்பம், மருத்துவம், மேலாண்மை, சட்டம் போன்ற உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சித் துறைகளில் பயன்பாட்டு மொழியாக தமிழைக் கொண்டு வரத் தேவையான தமிழ்ச் சொற்களை உருவாக்க வேண்டும்.
- அனைத்துத் துறைகளிலும் உலகின் பல நாடுகளில் பயன்பாட்டில் உள்ள பாடப் புத்தகங்கள் தமிழிலும் வர வேண்டும். ஆங்கிலம் மற்றும் பல்வேறு உலக மொழிகளில் வெளிவரும் ஆராய்ச்சி நூல்களை அந்தத் துறையைச் சேர்ந்த வல்லுநர்களோடு தமிழறிஞர்களும் இணைந்து, அவற்றின் செழுமை மாறாமல் தமிழ் மொழியில் மாற்றம் செய்ய வேண்டும். அதைக் கல்வி பயில்வதற்கான நூலாக மாற்றம் செய்து, அதை அனைத்து உயர்கல்வி நிலையங்களுக்கும் கொண்டு சேர்க்க வேண்டும்.

- உலகத் தொடர்பு மொழியான ஆங்கிலத்தையும், தாய் மொழியான தமிழையும் அடிப்படையாக வைத்து நமது மொழியை வளர்க்க வேண்டும். முதலில் தமிழ் மொழியில் உயர் கல்வியைக் கற்பிக்கச் செய்து, அதன்பிறகு, ஆராய்ச்சியையும் நமது மொழியிலேயே மேற்கொள்ளச் செய்ய வேண்டும். தமிழ் மொழியின் வாயிலாகச் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு செய்து உலக அளவில் அவற்றைக் கொண்டு செல்ல வேண்டும். அவற்றைப் புத்தகங்களாகவும், ஆராய்ச்சி நூல்களாகவும் வெளியிடுவது அவசியம்.

- தமிழ் மொழி வளர்வதற்கு உயர்கல்வி மற்றும் தொழில் நிறுவனங்களின் பங்கு மிகவும் முக்கியமானது. தொழில்நுட்பங்கள், அறிவியல், மருத்துவம் போன்ற துறைகளில் தமிழ் மொழியிலேயே ஆராய்ச்சிகளைச் செய்து, தாய்மொழியிலேயே சிந்திக்கும் திறனையும், கற்பனைத் திறனையும் மேம்படுத்த வேண்டும்.

- இதன் மூலம், நாம் உலகத் தரத்தோடு புதிய சாதனங்களை, இயந்திரங்களை உற்பத்தி செய்து உலக நாடுகளோடு போட்டி போட்டு வெற்றி பெற முடியும். இத்தகைய சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கான கொள்கைகளை வகுக்க வேண்டும். இதன்மூலம், தொழில் மேம்பாடு அடைவதோடு, வேலைவாய்ப்பும் அதிகரிக்கும். மாணவர்கள் தங்களுக்குப் பிடித்த துறையைத் தேர்ந்தெடுத்துப் படிக்கும் சூழல் ஏற்படுவதுடன், தாய்மொழியிலேயே படிப்பதால் தமிழும் வளரும்.

- ஆட்சி அதிகாரத்திலும், சட்டம் மற்றும் நீதித்துறையிலும் தமிழ் மொழியையே முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். அதேசமயம், தொடர்புமொழியாக ஆங்கிலத்தைக் கற்றுக்கொண்டு அதை, துணை ஆட்சி மொழியாகப் பயன்படுத்த வேண்டும். தமிழ், ஆங்கிலம் மொழிகள் மட்டுமல்லாது, மற்ற இந்திய மொழிகளையும் கற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு, வசதிகளை ஏற்படுத்த வேண்டும். தமிழ் நூல்களை மற்ற மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்ய வேண்டும். அதேபோன்று, மற்ற மொழிகளின் நூல்களை தமிழ் மொழியில் மொழிபெயர்ப்பு செய்து வெளியிட வேண்டும்.

இந்த 6 அம்ச செயல் திட்டங்களை தமிழ்ப் பல்கலைக்கழகங்கள் முதல் தமிழ் ஆர்வலர்கள் வரை அனைத்துத் தரப்பினரும் முன்னெடுத்துச் சென்றால் தமிழ் செழித்து வளரும்.

வாழ்க்கையின் வழிகாட்டி திருக்குறள்;

எனது வாழ்க்கையின் பல்வேறு நிலைகளில் உறுதுணையாக இருந்து வழிகாட்டியாக என்னை வழிநடத்தியது திருக்குறள்தான். ‘அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும் உள்ளழிக்கல் ஆகா அரண்’ என்பது எனக்குப் பிடித்த திருக்குறளாகும். ‘அறிவு என்பது அழிவு வராமல் காக்கும் கருவி என்பதோடு, அது பகைவராலும் அழிக்க முடியாத கோட்டை’ என்பது அந்தக் குறளின் அர்த்தமாகும். நமது இந்தியாவில் ஒவ்வோர் இளைஞருக்கும் ஒரு லட்சியம் வேண்டும். அந்த லட்சியம் நிறைவேற கடுமையாக உழைக்க வேண்டும். தொடர்ந்து அறிவைப் பெற அதைத் தேடிச் சென்றடைய வேண்டும். விடா முயற்சி வேண்டும். தோல்வி மனப்பான்மையை தோல்வியடையச் செய்ய வேண்டும். இந்தக் குணங்கள் இருந்தால் கனவு நனவாகும். ●



# அகரம் நிகழ்வுகள்



## ‘நமது கிராமம்’!


அகரம் மாணவர்கள் சுமார் 900 கிராமங்களிலிருந்து வந்துள்ளனர். இவர்கள் அனைவரின் நோக்கமும், படித்து முடித்ததும், தங்கள் கிராமத்துக்கு தங்களால் முடிந்த நற்செயல்களைச் செய்ய வேண்டும் என்பதே.

2015-ம் ஆண்டு சென்னை வெள்ளத்துக்குப் பிறகு களத்தில் இறங்கிப் பணியாற்றிய நமது ‘யாதும் ஊரே’ தன்னார்வலர் குழு, ‘மக்களுக்கு அந்த நேரத் தேவைக்கான பொருள்கள் வழங்குவதைவிட, மறுவாழ்வுக்கு தேவையான செயல்பாடுகளைச் செய்வதே சிறந்தது’ என்று உணர்ந்தது. அப்படி செயலில் இறங்கவே, திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டைக்கு அருகேயுள்ள கச்சூர், நெல்வாய் மற்றும் கெருகம்பாக்கம் ஆகிய மூன்று கிராமங்களில் உள்ள இருளர் பகுதிகளை அகரம் அறக்கட்டளை சில குழுக்களின் உதவியுடன் தத்தெடுத்துள்ளது. ‘நமது கிராமம்’ திட்டம் இங்குதான் செயல்படுகிறது.

இந்தப்பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவது, கல்வி வசதி, மருத்துவ வசதி, தொழில் மற்றும் வேலைவாய்ப்புகளை அடையாளம் கண்டறிவது என அவர்களோடு இணைந்து அகரம் நமது கிராமக் குழு களமிறங்கியுள்ளது. பள்ளியிலிருந்து இடைநின்ற மாணவர்களை அடையாளம் கண்டு மீண்டும் பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளனர். நமது குழுவின் முயற்சியால் இந்த கிராமங்களில் மாலை நேர வகுப்புகள், உள்ளூர் மக்களின் உதவியுடன் நடத்தப்படுகின்றன. உடல்திறனை மேம்படுத்த விளையாட்டுப் பொருட்களும் வழங்கப்பட்டுள்ளன.

அரசு நலத்திட்டங்கள் பற்றி விழிப்பு உணர்வு ஏற்படுத்தி, அவர்களுக்குத் தேவையான சான்றிதழ்களும் பெற்றுத் தரப்படுகின்றன. மருத்துவ முகாம்கள் நடத்தி சிகிச்சை அளிக்கப்படுகிறது. அரசு வழங்கும் நிலத்தை சரியாகப் பயன்படுத்துதல், பெற்றோர்களுக்கான தொழில் வாய்ப்பு எந்தெந்தப் பிரிவுகளில் உள்ளன என அடையாளம் காட்டுதல், சுய தொழில்முறைகள், சிறு மற்றும் குறு தொழில் கற்றுக் கொடுத்தல், மகளிர் சுயஉதவிக் குழுக்கள் அமைத்தல், இயற்கை உரம் தயாரித்தல், கால்நடை வளர்ப்பு என தொடர்ச்சியாக பணிகள் நடைபெறுகின்றன.

பள்ளி விடுமுறை நாட்களில் இந்த கிராமங்களின் பிள்ளைகளுக்கு கோடைக்காலப் பயிற்சி வகுப்புகள் மற்றும் குளிர்கால முகாம்கள் நடைபெறுகின்றன.









# ‘விதை’ பயிற்சி!

‘விதை’ திட்டத்தின்கீழ் கல்லூரிகளில் படித்துவரும் அகரம் மாணவர்களில், இந்த ஆண்டுடன் தங்களது கல்லூரிப் படிப்பை நிறைவு செய்பவர்களுக்கு பல்வேறு பயிற்சிகள் அகரம் அறக்கட்டளையால் தரப்படுகின்றன.

வேலைவாய்ப்பு தேடும்போது எதிர்கொள்ளும் சவால்களை சமாளிப்பதற்குத் தேவையான திறன் மற்றும் தகவல்தொடர்புப் பயிற்சிகள் Ford India Pvt Ltd நிறுவனத்தின் உதவியுடன் தரப்பட்டன. கடந்த 2014-15 கல்வியாண்டில் எஞ்சினியரிங் கல்லூரிகளில் சேர்ந்த 50 மாணவ, மாணவிகள் ஒரு பிரிவாகப் பயிற்சி எடுத்தனர். இதேபோல 2015-16 கல்வியாண்டில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேர்ந்த 90 மாணவ, மாணவிகள் ஒரு பிரிவாகப் பயிற்சி எடுத்தனர். வார இறுதியில் மொத்தம் 8 நாட்கள் காலை 10 முதல் பிற்பகல் 1 மணி வரை Toaste Master Class (ஆங்கிலம் மற்றும் தகவல்தொடர்புப் பயிற்சி) நடத்தப்பட்டது. இதில் மாணவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாகவும், குழுவாகவும் ஆங்கிலத்தில் பேசவும் உரையாடவும் வைக்கப்பட்டனர். ஒவ்வொரு வார வகுப்பிலும் ஒவ்வொரு சிறப்பு விருந்தினர் கலந்துகொண்டு தகவல்தொடர்பில் தங்களது அனுபவம் மற்றும் ஆலோசனைகளை வழங்கினர்.

இந்தப்பயிற்சியை நெறிப்படுத்துவதற்காகக் கலந்துகொண்ட தன்னார்வலர்கள் (Ford India Pvt Ltd) ஒவ்வொருவருக்கும் 20 மாணவர்கள் வீதம் 5 குழுக்களாகப் பிரித்து பயிற்சியில் வழிநடத்திச் சென்றனர். இறுதி நாளன்று சிறப்பு விருந்தினர்களாக Akara பள்ளியின் தாளாளர் பேராசிரியர் பழனி அவர்களும், Ford India Pvt Ltd நிறுவனத்திலிருந்து மேலாளர்களும் பங்கேற்றனர். பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு சிறப்பு விருந்தினர்களால் பாராட்டுச் சான்று வழங்கப்பட்டது.












# பள்ளியில் ஒரே ஒரு தேர்வு மட்டுமே!

கல்வியில் பல புதுமைகளைச் செய்துகொண்டிருக்கும் நாடு, பின்லாந்து. அந்தப்புதுமைகளுக்கு நல்ல விளைவுகளும் கிடைக்கின்றன. உலகெங்கும் இருக்கும் நாடுகளின் கல்விமுறைகள் எப்படிப்பட்டவை என்பதை Programme for International Student Assessment (PISA) என்ற தரத்தால் அளவிடுகிறார்கள். இந்தத் தரவரிசையில் உலக அளவில் பின்லாந்து 12-வது இடத்தில் இருக்கிறது. ஆனால், கல்வியில் செய்யும் புதுமைகளில் முதலிடத்தில் இருக்கிறது.

பின்லாந்து கல்விமுறையின் உன்னதங்களாக பல விஷயங்களைச் சொல்கிறார்கள்.

- மழலை மாறாத வயதில் 'ப்ரீ கேஜி' போவது பின்லாந்தில் வழக்கமில்லை. ஆறு வயதிலிருந்து ஏழு வயது வரை, ஒரு வருடம் மட்டுமே மழலையர் பள்ளியில் சேர வேண்டும். பிறகு, முறையான பள்ளி. ஏழு வயதில்தான் கல்வி கற்கவே தொடங்குகிறார்கள். மனப்பாட முறை கல்வி கிடையாது. முதல் ஆறு வருடங்களுக்கு கற்கும் திறமையை அளவிடுதல் இல்லை, தேர்வு இல்லை. அறிவானவர்கள், திறமை குறைந்தவர்கள் என மாணவர்களைத் தகுதி பிரிப்பதில்லை. கற்கும் திறன் குறைந்த மாணவர்களுக்கு அதை மேம்படுத்த கூடுதல் பயிற்சிகள் மட்டும் தரப்படும்.
- ஒவ்வொரு கோடை விடுமுறைக்குப் பிறகும் ஆசிரியர் மாறமாட்டார். முதல் ஆறு வருடங்களுக்கு ஒரே ஆசிரியர்தான். குழந்தைகளைப் புரிந்துகொண்டு, நெறிப்படுத்தி, கல்வியையும் வாழ்வியல் அறிவையும் தந்து வழிநடத்துவது ஆசிரியரின் கடமை. ஒரு வகுப்பறையில் 20–25 மாணவர்கள்தான் இருப்பார்கள். ஒவ்வொரு பள்ளியிலும் உள்ள சூழலுக்கேற்பப் பாடத்திட்டத்தையும், கற்பிக்கும் முறையையும் தீர்மானிக்கும் சுதந்திரம் ஆசிரியர்களுக்கு உண்டு. வெறுமனே சொல்லித்தருதலைவிட செயல்முறைக் கல்வியே அதிகம். நிஜ வாழ்க்கையில் தேவைப்படும் அத்தனை திறனையும் வகுப்பறையில் கற்றுக்கொள்கிறார்கள் பிள்ளைகள்.



● நல்ல தேர்வு முறை. ஆரம்பக்கல்வியில் சேரும் ஒரு பின்லாந்து மாணவன், உயர்நிலைக் கல்வியை முடிக்கும்போது ஒரே ஒரு தேர்வு எழுதினால் போதும். 'அடிக்கடி தேர்வு எழுதினால் மட்டுமே பிள்ளைகள் புத்திசாலிகள் ஆவதில்லை. அதுமட்டும் இதற்குக் காரணமில்லை. தேர்வு வைத்தால், அந்தத் தேர்வுக்கு ஏற்றது போல பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் சூழலுக்கு ஆசிரியர்கள் தள்ளப்பட்டுவிடுவார்கள்' என்கிறார்கள் பின்லாந்து கல்வியாளர்கள். 'நேஷனல் மெட்ரிகுலேஷன் தேர்வு' எனப்படும் அந்தப் பள்ளி இறுதித் தேர்வில், வெறுமனே பாடப்புத்தகக் கேள்விகள் மட்டும் இருக்காது. பொது அறிவு, அரசியல் என எல்லாவற்றிலிருந்தும் கேள்விகள் கேட்கப்படும். 'உன் நண்பன் போதை மருந்துக்கு அடிமையானால் நீ என்ன செய்வாய்', 'திடீரென வேலை போய்விட்டால், உன் மனநிலை எப்படி இருக்கும்' என கேள்விகள் இருக்கும். 'இந்த வயசுல அவங்க தெரிஞ்சுக்க வேண்டிய விஷயமா இது' என நாம் தவிர்க்கும் பல விஷயங்களை வகுப்பறையில் விவாதிக்கிறார்கள் பின்லாந்து பிள்ளைகள்.

● வீட்டுப்பாடம் குறைவு. 15 வயதிலிருக்கும் ஒரு பின்லாந்து பள்ளி மாணவன், வாரத்தில் மூன்று மணி நேரம் மட்டுமே 'ஹோம் ஒர்க்' செய்ய வேண்டியிருக்கும். இதனால் அவர்களுக்கு விளையாட நிறைய நேரம் கிடைக்கிறது. வகுப்பறையிலும் தொடர்ச்சியான பாடங்கள் கிடையாது. ஒரு பாடவேளை 45 நிமிடங்கள்; அதன்பிறகு 15 நிமிடங்கள் இடைவேளை. பிறகே அடுத்த பாடவேளை தொடங்கும். பாடங்களைப் புரிந்து மனதில் பதிந்துகொள்ளவும் விவாதித்துத் தெளிவு பெறவும் இந்த இடைவேளை உதவுகிறது.

● 7 வயது முதல் 16 வயது வரை கல்வி கட்டாயம். பள்ளியில் மாணவர்களுக்குக் கல்வி, உணவு, மருத்துவம், சுற்றுலா போன்ற அனைத்துச் செலவுகளையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்கிறது. குழந்தைகளின் படைப்புத்திறன், சிந்தனை சக்தி போன்றவை வளர்க்கப்படுகின்றன.

● உயர்கல்வியிலும் பின்லாந்தில் புரட்சி நடக்கிறது. கல்விக்கடன் வாங்கியோ, பரம்பரைச் சொத்துகளை விற்றோ கல்லூரியில் சேர வேண்டிய அவலம் இல்லை. பின்லாந்தில் இளநிலைப் பட்டம், முதுநிலைப் பட்டம், ஆராய்ச்சிக் கல்வி என எல்லாமே இலவசம். பின்லாந்தில் படிக்க வரும் வெளிநாட்டு மாணவர்கள்கூட டியூஷன் ஃபீஸ் செலுத்தவேண்டிய அவசியமில்லை. உலகிலேயே அதிகம் ஆராய்ச்சிகள் நடக்கும் நாடு, அதிக கண்டுபிடிப்புகளுக்கு காப்புரிமை பெறும் நாடு போன்ற பட்டியல்களில் பின்லாந்துக்கு முக்கியமான இடம் உண்டு.

● நம் ஊரில் மருத்துவக் கல்லூரியில் சேர இடம் கிடைப்பது சிரமம். பின்லாந்தில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இடம் கிடைப்பது கஷ்டம். விண்ணப்பிக்கும் 10 பேரில் ஒருவருக்கே ஆசிரியர் பயிற்சியில் சேரும் வாய்ப்பு கிடைக்கிறது. டாக்டர்கள், கல்லூரிப் பேராசிரியர்களுக்கு இணையான சம்பளம், பள்ளி ஆசிரியர்களுக்குக் கிடைக்கிறது. சமூகத்தில் மதிப்பு வாய்ந்த தொழிலாகவும் அது உள்ளது. ஒரு பள்ளி ஆசிரியரின் ஆண்டுச் சம்பளம் 27 லட்சம் ரூபாய். பணிபுரியும் ஆசிரியர்களுக்குத் தொடர் பயிற்சியும், மதிப்பீடும் கட்டாயம். தினமும் சில மணி நேரங்கள் மட்டுமே பாடம் எடுக்க வேண்டும்.

ஐரோப்பிய நாடான பின்லாந்தின் மக்கள்தொகை சுமார் 55 லட்சம். பல நாடுகளிடம் அடிமைப்பட்டுக் கிடந்து, முதல் மற்றும் இரண்டாம் உலகப் போர்கள், உள்நாட்டுக் கலகங்கள் என்று பல்வேறு பாதிப்புகளைச் சந்தித்த நாடு அது. 1950 வரை ஒரு விவசாய நாடாக மட்டுமே இருந்த பின்லாந்து, இன்று உலகின் அதிக தனிநபர் வருமானம் உடைய நாடுகளில் ஒன்றாகவும், பொருளாதாரத்தில் மிகவும் முன்னேறிய நாடுகளில் ஒன்றாகவும் உள்ளது. ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு அளவுகோல்களாகக் கருதப்படும் கல்வி, பொருளாதாரம், வாழ்க்கைத்தரம், குடிமக்கள் உரிமைகளைப் பாதுகாத்தல், மனிதவள மேம்பாடு ஆகியவற்றில் தலைசிறந்து விளங்குகிறது.

இதற்கு முக்கியமான காரணம், கல்விதான்.



'பொருளாதார வளர்ச்சி அடைவதற்கு கல்வியே சிறந்த கருவி' என 1963-ல் பின்லாந்து நாடாளுமன்றம் தீர்மானித்தது. ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக பல நூறு ஆசிரியர்களைக் கலந்தாலோசித்து உருவானதுதான் அந்த நாட்டின் புதிய கல்விமுறை.

இரண்டு மொழி பேசும் மக்கள் மட்டுமே இருக்கும் சிறிய நாடு, பொருளாதார ஏற்றத்தாழ்வு குறைவு (ஐரோப்பாவிலேயே ஏழைகள் குறைவாக இருக்கும் நாடு அது!), மக்களிடையே கலாசார வித்தியாசம் கிடையாது என பின்லாந்து கல்விமுறையின் வெற்றிக்குப் பல காரணங்களைச் சொல்கிறார்கள். ஆனால், பின்லாந்து போன்ற நாடுகளில் பின்பற்றப்படும் கல்விமுறைகளை நம் மாநிலத்துக்கு ஏற்றவாறு மாற்றிப் பயன்படுத்துவது குறித்து அரசும், கல்வியாளர்களும் விவாதிக்க வேண்டும். நம் அடுத்த தலைமுறைக்கு சிறப்பான எதிர்காலத்தை உருவாக்கித் தர, அனைவரும் கைகோர்க்க வேண்டும். ●




# பிளஸ் 2–வுக்குப் பிறகு...

# உடனடி வேலைவாய்ப்பு தரும் டிப்ளமோ மருத்துவப் படிப்புகள்!

■ கல்வியாளர் நெடுஞ்செழியன்

பத்தாம் வகுப்பு படிக்கும்வரை பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் ஒரு குழப்பமும் இல்லை. பிளஸ் 1 சேரும்போது, 'எந்தப் பிரிவைத் தேர்வு செய்வது?' என்ற முதல் தேர்வு வருகிறது. எதிர்காலம் குறித்த தெளிவான திட்டம் வைத்திருப்பவர்களுக்கு எந்தக் குழப்பமும் இருப்பதில்லை. மற்றவர்களுக்கே சிக்கல்.

பிளஸ் 2வில் கணிதமும் அறிவியலும் படிக்கும் அத்தனை பேரும் டாக்டர் அல்லது எஞ்சினியர் என்றே எதிர்காலம் பற்றிக் கனவு காண்கிறார்கள். மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை இங்கே மிகக் குறைவு. நீட் தேர்வுக்குப் பிறகு மருத்துவச் சேர்க்கை என்பது கடினமான விஷயமாகிவிட்டது. எஞ்சினியரிங்கோ எதிர்காலம் பற்றிய நிச்சயமின்மையை பலருக்கு ஏற்படுத்துகிறது. ஆனால், இந்த இரண்டையும் தாண்டி ஏராளமான வாய்ப்புகள் இங்கே கொட்டிக் கிடக்கின்றன. படித்து முடித்ததும் உடனடி வேலைக்கு உத்தரவாதம் தருகிற பாடப்பிரிவுகள் அவை. கடிவாளம் கட்டிய குதிரை மாதிரி ஒரே திசையில் பார்ப்பதால், பலருக்கும் இவை பற்றித் தெரிவதில்லை.

அதிகம் அறியப்படாத படிப்புகள் இவை. 'வேலைவாய்ப்புக்காக மட்டுமே உயர்கல்வி' என முடிவெடுத்துப் படிக்கும் பலருக்கும் இவை மதிப்புமிக்க வாய்ப்புகள்.

கிராமப்புற மாணவர்களில் பலர் நல்ல மதிப்பெண் பெற்றிருந்தாலும், மருத்துவ கல்லூரிகளில் சேர்வது அவர்களுக்குக் கடினமான விஷயமாக இருக்கும். நுழைவுத்தேர்வு மிகப்பெரிய முட்டுக்கட்டையாக மாறிவிட்ட சூழலில், மருத்துவத் துறை சார்ந்த தங்களுடைய ஆர்வத்துக்கு டிப்ளமோ மருத்துவப் படிப்புகள் மூலம் அவர்கள் வெளிச்சம் தேடலாம். இவற்றில் பல சிறப்புகள் உள்ளன. டிப்ளமோ படித்து முடித்தவுடன் பணி கிடைக்கும் சூழல் உள்ளது. அரசு மருத்துவக் கல்லூரிகளில் இந்தப் படிப்புகளை படிக்கலாம், கட்டணமும் மிகக் குறைவு.

### எங்கு படிக்கலாம்?

டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கும் அரசு மருத்துவக் கல்லூரிகளில் மருத்துவ டிப்ளமோ படிப்புகள் சொல்லித் தரப்படுகின்ற தகவல் பலருக்குத் தெரியாது. தனியார் கல்லூரிகளிலும் இத்தகைய படிப்புகள் உள்ளன. என்றாலும், அரசு மருத்துவக் கல்லூரிகளில் படிக்கும்போது மட்டுமே வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. மருத்துவச் சுற்றுலாவாக தமிழகத்துக்கு வரும் வெளிநாட்டவர்கள் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. தமிழகத்தின் சிறு நகரங்களிலும் நவீன வசதிகளுடன் புதுப்புது மருத்துவமனைகள் தோன்றியபடி உள்ளன. இதனால், இந்தத் துறைகளைத் தேர்ந்தெடுத்து படிப்பவர்களுக்கு வாய்ப்புகள் நிறைய உள்ளன.

### யாரெல்லாம் இந்தப் படிப்புக்கு விண்ணப்பிக்க முடியும்?

பிளஸ் 2–வில் உயிரியல், நர்சரி பாடப்பிரிவில் படித்தவர்கள் இந்தப் படிப்புக்கு விண்ணப்பிக்கலாம். நுழைவுத் தேர்வு எதுவும் நடத்தப்படுவதில்லை. பிளஸ் 2 தேர்வில் எடுத்த மதிப்பெண்கள் அடிப்படையில் இடங்கள் அளிக்கப்படும். விண்ணப்பிக்க வேண்டுமானால், குறைந்தபட்சம் 45% மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்.

### என்னென்ன படிப்புகள் உள்ளன?

**Diploma in Dialysis Technology**

சிறுநீரகக் கோளாறு உள்ளவர்களுக்கு மருத்துவர்





அறிவுரைப்படி டயாலிசிஸ் செய்யும் மருத்துவத் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கான டிப்ளமோ படிப்பு இது. டயாலிசிஸ் உபகரணங்களைக் கையாளுதல், அவற்றைப் பராமரித்தல் ஆகியன இந்தப் படிப்பில் சொல்லித் தரப்படும். பெரிய தனியார் மருத்துவமனைகளில் உடனடியாகப் பணி கிடைக்கும் வாய்ப்பும் உள்ளது.

### Diploma in Operation Theatre & Anaesthesia Technology

அறுவை சிகிச்சை அறைகளில் உள்ள உபகரணங்களைக் கையாளுதல், மயக்க மருந்து செலுத்துவது உள்ளிட்டவற்றை கற்றுத்தரும் படிப்பு இது. இதுவும் வேலைவாய்ப்புள்ள துறைதான்.

### Diploma in Accident & Emergency Care Technology

அவசர சிகிச்சைப் பிரிவுக்கு அழைத்து வரப்படும் நோயாளிக்கு, ஆம்புலன்ஸில் அழைத்து வரும்போதே, தேவையான முதலுதவி மற்றும் உயிர் காக்கும் அவசர சிகிச்சையை அளிப்பது தொடர்பான படிப்பு இது. இப்போது பெரிய மருத்துவமனைகள் இந்தப் படிப்பு படித்தவர்களுக்கு நல்ல சம்பளத்தில் பணி தருகின்றன.

### Diploma in Radiology & Imaging Technology

எக்ஸ் ரே எடுப்பது, அது சரியாக வந்துள்ளதா என்று பார்ப்பது, ஸ்கேனிங் செய்வது உள்ளிட்டவற்றை சொல்லித்தரும் படிப்பு இது. இந்தப் படிப்பு படித்தோருக்கும்



வேலைவாய்ப்புகள் அதிகமாகவே உள்ளன.

### Diploma in Cardiac Non Invasive Technology

நோயாளிகளுக்கு இதயம் தொடர்பான நோய்கள் உள்ளனவா எனக் கண்டறியும் சோதனைகளுக்கு இன்று தேவை மிக அதிகம். இவற்றைச் சொல்லித் தருகிறது இந்த கோர்ஸ். இரண்டு வருட டிப்ளமோ படிப்பு இது.

### Diploma in Medical Record Science

நோயாளியின் உடல்நிலை குறித்த விவரங்கள், அவருக்கு வந்த நோய் குறித்த விவரங்கள், சிகிச்சை விவரங்களை ஆவணப்படுத்துவது பற்றிய படிப்பு இது. மருத்துவ இன்சூரன்ஸ் குறித்த தேவையும் விழிப்புணர்வும் பெருகியுள்ள நிலையில் இந்தப் படிப்பு வேலைவாய்ப்பு மிக்கதே.

### Diploma in Critical Care Technology

உயிர்காக்கும் சிகிச்சையில் உள்ள நோயாளிகளின் உடல்நிலை நிலவரத்தைக் கவனித்தல், தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ள உபகரணங்களைக் கையாளுதல்



மற்றும் பராமரித்தல் குறித்த படிப்பு இது. சின்னச்சின்ன நகரங்களில்கூட இந்தப் படிப்பை முடித்தவர்களுக்கான தேவை உள்ளது.

### Diploma in Medical Lab Technology

நோய்களைக் கண்டறிதல், உடலில் இருக்கும் குறைபாடுகளைக் கண்டறிதல், நோய்களைத் தடுப்பதற்கான வழிகளை அறிந்து சொல்லுதல் ஆகியவற்றை மருத்துவப் பரிசோதனைகள் மூலம் செய்வதே மெடிக்கல் லேப் டெக்னாலஜி. மருத்துவமனைகள் சாராத பரிசோதனைக்கூடங்கள் பெருகியுள்ள சூழலில், இந்தப்படிப்பை முடித்தவர்களுக்கு வேலை மற்றும் சுயதொழில் வாய்ப்பு என இரண்டுமே உள்ளன.

### Diploma in Dental Hygienist

பல் தொடர்பான வெளி நோய்களுக்கு சிகிச்சை அளிக்கக்கூடியதை சொல்லித்தரும் டிப்ளமோ படிப்பு இது. பல் மருத்துவருக்கு உதவியாளராகப் பணியாற்றலாம். இந்தப் படிப்பைப் படித்தால், தனியாக க்ளினிக்கையும் நடத்த முடியும்.

*அடுத்த இதழில்...*

குழந்தைகளுக்கான கதைகளும் பெரியவர்களுக்கான நீதிகளும் 1

# கொஞ்சுவோம்... ஆனால் கூண்டுக்குள் இருக்கணும்!

■ பேராசிரியர் ச.மாடசாமி

எப்போதும் ஓர் 'ஆனால்' இருக்கிறது; நழுவல்களிலும் சரி, உறவுகளிலும் சரி. நழுவுகிறவர்கள் சொல்கிறார்கள்...

'நான் சாதி, மதம் பாக்கிறதில்லை. ஆனா, இதெல்லாம் மத்தவங்களுக்காகத்தான்!'


'பொண்ணு நல்ல பொண்ணுதான். ஒரு குத்தம் சொல்லமுடியாது. ஆனா, நிறம் கம்மி!'

'படிச்சவன்தான்; சுறுசுறுப்பானவன்தான். ஆனா, கிராமத்துப் பையன். இங்கிலீஷ் சரியா வரல.'

உறவுகளிலும் இதே கதைதான்... ''கேக்குறது எதுன்னாலும் வாங்கித் தர்றேன். ஆனா, நீ நான் சொன்ன பேச்சைக் கேக்கணும்'' என்கிறது வீடு. ''பொறுமையா இருப்பேன்; அடிக்க மாட்டேன். ஆனா, நீங்க சேட்டை பண்ணாம இருக்கிற வரைக்கும்தான்'' என்கிறது வகுப்பறை.

'ஆனால்' இல்லாத அன்பைத் தேடுவது கடினம். கட்டுப்பட்டு இருப்பவரைக் கண்டால்தான் முகங்கள் மலர்கின்றன. வார்த்தைகள் அமுதமாகக் கொட்டுகின்றன. அன்பும் ஊற்றெடுக்கிறது. கட்டுப்பாடு சற்று விலகிவிட்டாலும், முகம் கறுத்து விடுகிறது. அன்பு சுருங்கிவிடுகிறது. 'அலறும் சத்தம்' கேட்கிறது. சுதந்திரத்தைப் பார்த்து அலறும் சத்தம்.

பள்ளி மரணங்கள் பெருகி வருகின்றன. மனதை உடைந்து உருக வைக்கும் மாணவர் தற்கொலைகள் அவை. அப்போதும்கூட பள்ளிகள் இப்படிப் பேசுகின்றன... ''முந்தியெல்லாம் பசங்க சொன்ன பேச்சைக் கேப்பாங்க. நாங்களும் அடிச்சுத் திருத்துவோம். அதுக்கு உரிமை இருந்துச்சு. இப்ப அடிக்கக்கூடாதுன்னு வந்தபிறகு கட்டுப்பாடே போச்சு!''





'நேசிப்போம். ஆனால், கட்டுப்பட்டு இரு' என்பது வீடுகள் மற்றும் வகுப்பறைகளின் ரகசிய உத்தரவு.

'The Happy Lion' கதை ஞாபகத்துக்கு வருகிறது. குழந்தைகளுக்கான கதை; கதையில் பெரியவர்களுக்கான நீதி இருக்கிறது. 1954–ல் வெளிவந்த கதை. லூயிஸ் பேஷியோ என்ற சுவிஸ் பெண் எழுத்தாளரின் கதை. கதைக்கு அற்புதமான படங்கள் வரைந்தவர் மற்றொரு குழந்தைக் கதை எழுத்தாளரான ரோஜர் டுவாய்ஸின். தமிழில் இக்கதையை 'மகிழ்ச்சியான சிங்கம்' என பேராசிரியர் குமரேசன் மொழிபெயர்த்துள்ளார்.

பிரான்ஸ் நாட்டின் நகரம் ஒன்றில் அமைந்திருந்த, விலங்கியல் பூங்காவின் மையமான பகுதியில் அந்தச் சிங்கத்தின் இருப்பிடம் இருந்தது. பாறைகள் சூழ்ந்த, நீர் நிரம்பிய, சிறு அகழி கொண்ட வீடு. யாரும் நெருங்கமுடியாத பாதுகாப்பான தூரத்தில் இருந்தது சிங்கத்தின் வீடு. அதே நேரம், எல்லோரும் பார்க்கக்கூடிய விதத்தில் அமைந்திருந்தது.

பூங்காவுக்கு வருகிறவர்கள் யாரும் சிங்கத்தைப் பார்த்து 'ஹலோ' சொல்லாமல் போவதில்லை. தின்பண்டங்களையும் மாமிசத் துண்டுகளையும் சிங்கத்தை நோக்கி வீசி அன்பைக் காட்டவும் மறப்பதில்லை. சிங்கம் இருந்த இடத்துக்கு அருகில், பாண்ட் வாத்தியம் இசைக்கும் மேடையும் இருந்தது. 'ஹலோ' சொல்வோரின் அன்பிலும், பாண்ட் வாத்திய

# THE HAPPY LION



இசையிலும் திளைத்தது சிங்கம். மகிழ்ச்சியான சிங்கம்!

பள்ளி மாணவன் ஃபிராங்காய்ஸ், ஆசிரியர் டுபாண்ட், சிங்க வீட்டின் அருகிலிருந்த பெஞ்சில் அமர்ந்து பின்னல் பின்னும் பெண்மணி பின்சன்... இந்த மூவரும் தினசரி மறக்காமல் சிங்கத்துக்கு ஹலோ சொல்பவர்கள்.

ஒரு நாள் சிங்க வீட்டின் வெளிக் கதவை மூட மறந்து விட்டார்கள். 'இது சரியில்லையே' எனச் சிங்கம் முதலில் நினைத்தது. பிறகு, 'தினசரி எல்லோரும் என்னைப் பார்க்க வருகிறார்கள்; இன்று நான் அவர்களைப் பார்க்கப் போவேன்' என்று சொல்லிக்கொண்டு இருப்பிடத்தை விட்டு வெளியே வந்தது. தெருவில் நடந்தது.

தெருவில் சிங்கத்தை முதலில் பார்த்தவர் ஆசிரியர் டுபாண்ட். ஆசிரியருக்கு 'ஹலோ' சொல்லத் தலையசைத்தது சிங்கம். அவரும் 'ஹலோ' சொல்வார் என்று எதிர்பார்த்தது. மாறாக, சிங்கத்தைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தார் ஆசிரியர். மயக்கம் போட்டு, நடைபாதையில் விழுந்தார். அப்போது தெருவில் நடந்துபோன மூன்று பெண்களும் அப்படித்தான் நடந்துகொண்டனர். 'ஹலோ' சொல்லவில்லை. அலறியடித்து ஓட்டம் பிடித்தனர்.

'நகரவாசிகளுக்கு நாகரிகமே தெரியவில்லையே' என்று சிங்கம் வருத்தப்பட்டது. அப்போது பின்சன் அதன் கண்களில் தெரிந்தார். தினசரி மறக்காமல் 'ஹலோ' சொல்பவர். இன்று என்னாச்சு? கையிலிருந்த காய்கறிப் பையைச் சிங்கத்தின் முகத்தில் வீசிவிட்டு ஓடினார். சிங்கத்துக்குத் தும்மல் வந்தது.

பக்கத்துத் தெருவில் பாண்ட் வாத்திய இசை கேட்டது. 'சரி, அங்கே போகலாம்!' சிங்கம் போனதும் இசை நின்றது. கூச்சல் கிளம்பியது. பாண்ட் வாத்தியக்காரர்கள் ஒருவரோடு ஒருவர் முட்டி மோதி ஓடினார்கள்.

எல்லாம் நினைத்ததற்கு மாறாக இருக்கிறது. பிரியப்பட்டு வீதிக்கு வந்தால் 'ஹலோ' சொல்ல ஒருவரும் இல்லை. பூங்காவுக்குள் இருந்தால் ஒரு மாதிரியாக நடந்து கொள்கிறார்கள்; வெளியே வந்தால் வேறு விதமாக இருக்கிறார்கள். என்ன மனிதர்கள்!

சிங்கம் சோர்ந்து உட்கார்ந்தது. சிங்கத்தைத் திரும்பப் பிடித்துப் போக தீயணைப்பு வண்டி வந்தது. தீயணைப்பு வீரர்கள் எச்சரிக்கையோடு சிங்கத்தை நெருங்கிக்கொண்டிருந்தார்கள். சிங்கத்துக்கு எதிலும் கவனம் இல்லை.

அப்போது 'ஹலோ சிங்கம்' என்ற குரல் கேட்டது. சிறுவன் ஃபிராங்காய்ஸ். விலங்கியல் பூங்காவுக்கு வெளியே 'ஹலோ' சொல்ல இதோ ஒருவன்! போன மகிழ்ச்சி திரும்பியது. ஃபிராங்காய்ஸ் சிங்கத்தை நெருங்கி அதன் தலையைத் தடவினான். 'வா, பூங்காவுக்குப் போகலாம்' என சிங்கத்தை அழைத்தான். சிங்கம் திரும்பிய மகிழ்ச்சியுடன் அவனோடு நடந்தது.

சிங்கம் பழையபடி பூங்கா வீட்டில். பழையபடி 'ஹலோ சிங்கம்!' என்ற பாசக்குரல்கள். பழையபடி தின்பண்டங்களும் மாமிசத்துண்டுகளும்! அவர்களுக்கு மட்டுமா... சிங்கத்துக்கும் ஒரு 'ஆனால்' இருக்கிறதே! எல்லோரும் 'ஹலோ' சொல்லட்டும். 'ஆனால்' ஃபிராங்காய்ஸ் 'ஹலோ' சொல்லும்போதுதான் அதன் மகிழ்ச்சி பெருகுகிறது.

உலகெங்கும் பல கோடிக் குழந்தைகள் கேட்டு ரசித்த கதை இது. இதைத் தொடர்ந்து சிங்கக் கதைகள் ஏராளமாய் வெளிவந்தன. காட்டு ராஜா என்ற அதிகார அடையாளம் நீங்கி, குழந்தைகள் உலகில் மற்றொரு செல்லப்பிராணியாகச் சிங்கம் நுழையவும் இக்கதை காரணமானது.

சுவாரசியமான கதை. சுவாரசியத்தைத் தாண்டி ஒரு கேள்வியும் இருக்கிறது.

''கட்டுப்படுத்திப் பாதுகாப்பான தூரத்தில் வைத்துவிட்டு, 'ஹலோ' சொல்லவும், தின்பண்டங்களை வீசவும், பிரியத்தைக் காட்டவும் குழந்தைகள்கூட விலங்குகள்தானா?'' என்பதுதான் அந்தக் கேள்வி. வீடுகளையும் வகுப்பறைகளையும் நோக்கி வீசப்படும் கேள்வி.

சுதந்திரம்தானே உண்மையான அன்பை நிரூபித்துக் காட்டும் களம். கட்டுப்பாட்டில் வைத்துத்தான் நம்மால் அன்பு செலுத்தமுடியும்; கட்டுப்பாடு சற்று விலகிச் சுதந்திரம் வந்துவிட்டால் நாம் மிரண்டு அலறுவோம் என்றால், நாம் தோற்றுவிட்டோம் என்பதுதானே அர்த்தம்?



**(பேசுவோம்...)**



# அகரம் விதைத்த விதை!

சமூக நோய்களுக்கு ஒற்றை மாமருந்தாக கல்வியே உள்ளது. அடித்தட்டில் இருக்கும் ஒரு குடும்பத்தின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்குக் கல்வியே காரணமாக இருக்கிறது. தரமான கல்வி கிடைக்கப்பெறாத, கிராமப்புற மற்றும் ஏழை மாணவர்களுக்கு அந்த வாய்ப்புகளைப் பெற்றுத் தருவதே, அவர்களின் வளர்ச்சிக்கான விதையாக இருக்கும்.

சமூக மற்றும் பொருளாதாரக் காரணங்களால், தாங்கள் விரும்பிய வாய்ப்புகளைத் தொடமுடியாமல் தவிக்கிறார்கள் பலர். இப்படித் தவிக்கும் தகுதி வாய்ந்த மாணவர்களுக்குத் தரமான கல்வியை அளிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு 25.09.2006 அன்று தொடங்கப்பட்டது அகரம் அறக்கட்டளை. தகுதியும் திறமையும் வாய்ந்த மாணவர்களுக்கும், தரமான கல்விக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைக்க, அகரம் தன் பங்கிற்கான முயற்சியைச் செய்து வருகிறது.

2010-ம் ஆண்டு தொடங்கப்பட்ட ‘அகரம் விதை திட்டம்’, கடந்த 8 ஆண்டுகளில் 1,952 மாணவர்களின் பட்டப்படிப்புக் கனவுகளை நிறைவேற்றியுள்ளது. இவர்களில் 83% பேர், முதல் தலைமுறையாகக் கல்லூரி வாசலைத் தொடும் மாணவர்கள். பெண்களுக்கே கல்வி அதிகம் மறுக்கப்படும் சூழலில், விதை திட்டத்தில் படிக்கிறவர்களில் 65% பேர் பெண்கள் என்பது பெருமிதம் தரும் புள்ளிவிவரம்.

‘விதை திட்டம்’ என்பது, தகுதிபெற்ற மாணவர்களின் கல்வியில் கவனம் செலுத்தும் ஒரு திட்டமாகும். அகரம் இல்லை என்னும் சூழலில், இந்த மாணவர்களின் கல்வி இடைநின்று விடும் வாய்ப்புள்ளது. விதை திட்டம், நன்கொடையாளர்களுக்கும் வாய்ப்பு தேவைப்படும் தகுதியுள்ள மாணவர்களுக்கும் இணைப்புப் பாலமாகச் செயல்படுகிறது. அகரம், தன்னார்வலர்கள் உதவியோடு இம்மாணவர்களின் கல்விப் பயணம் வெற்றிகரமாக முடிவடைய உதவுகிறது.

இப்போது, எட்டாம் ஆண்டுக்கான ‘விதை’ திட்டத்தை வரும் கல்வியாண்டில் அகரம் ஃபவுண்டேஷன் மேற்கொள்கிறது. ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் மாதமே தமிழ்நாடு பள்ளிக்கல்வித் துறை இயக்குனர், ‘அகரம் விதை திட்டம்’ பற்றி அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் கடிதம் அனுப்புவார். அதைத் தொடர்ந்து எல்லா பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கும் அங்கிருந்து கடிதம் அனுப்பி வைக்கப்படும். வழக்கம் போல இந்த ஆண்டும் கடிதம் அனுப்பப்பட்டு விட்டது.





# தன்னார்வலர்களே... அகரம் அழைக்கிறது!



விதை திட்டத்தில் தன்னார்வலர்களின் பணி முக்கியமானது. ஒரு மாணவரின் வழிகாட்டுனராகத் தொடர்ந்து அவர்களின் கல்வி சம்பந்தமான விஷயங்களில் துணை நின்று உதவிசெய்ய வேண்டியிருக்கும். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். உள்ளடங்கிய கிராமத்திலிருந்து வரும் ஒரு மாணவர், நகர்ப்புறக் கல்வி நிறுவனத்தில் எதிர்கொள்ளும் ஆரம்ப கட்ட சவால்களை சமாளிக்கவும், அவர்கள் தொடர்ந்து உயர்கல்வியை வெற்றிகரமாய் முடிப்பதற்கும் தன்னார்வலர்களின் பணி மிக அவசியம். மாணவர்களின் மொழிப் பிரச்னை, பொது சூழ்நிலைக்குத் தம்மை தகவமைத்துக் கொள்வது போன்றவற்றில் இவர்களே உதவ வேண்டும்.

விதை திட்டத்தின் சவால்களே, மிகப்பெரிய அளவில் தேவைப்படும் மனித உழைப்பும், பொருளாதாரத் தேவையும்தான். சமூக அக்கறையோடு, தமது உழைப்பையும் நேரத்தையும் புன்முறுவல் மாறாமல் தரும் உதாரண மனிதர்களே, அகரம் தன்னார்வலர்கள்.

உதவி வேண்டி விண்ணப்பிக்கும் மாணவர்களைத் தேர்வு செய்வது, அவர்களுக்கான பயிற்சி வழங்குதல், மாணவர்களின் வீடுகளைப் பார்வையிடுதல், அலைபேசி மற்றும் மின்னஞ்சல் வழியாகத் தகவல் வழங்குதல், பயிற்சி வகுப்புகளை ஒழுங்கு செய்தல், நிர்வாகரீதியான பணிகள், தகவல் சேகரிப்பு மற்றும் ஆய்வு செய்தல், மாணவர்களுக்கு மென்டார்களாக இருத்தல் என பல்வேறு பணிகளை தன்னார்வலர்களே செய்கின்றனர்.

கடந்த வருடங்களில் சுமார் 1500க்கும் மேற்பட்ட தன்னார்வலர்களின் அயராத ஈடுபாட்டலும் ஒத்துழைப்பாலுமே அகரம் இந்த இடத்தை வந்தடைந்துள்ளது. அகரம் தனது பயண எல்லையை விரிவாக்கவும், வெவ்வேறு நிலைகளை எட்டவும் இன்னும் தன்னார்வலர்கள் தேவை. பல்வேறு துறைசார்ந்த தன்னார்வலர்கள் எங்களோடு இணைந்து ஆரோக்கியமான சமூக மாற்றத்துக்குத் தளம் அமைத்திட அகரம் அழைக்கிறது.

மாற்றத்தை எம்மிலிருந்து தொடங்க, எம்முடன் இணைய, (https://agaram.in/volunter. php )/ www.agaram.in எனும் இணையதள முகவரியை க்ளிக் செய்யவும்.

### அகரம் ‘விதை’ திட்டத்தில் பங்கேற்கத் தேவையான விதிமுறைகள்:

- இந்தக் கல்வியாண்டில் பிளஸ் 2 பயிலும் மாணவர்களுக்கே இத்திட்டம் பொருந்தும். அரசுப் பள்ளி மற்றும் அரசு உதவிபெறும் பள்ளியில் பயில்பவராக இருக்க வேண்டும். கடந்த ஆண்டு பிளஸ் 2 முடித்து, பொருளாதாரச் சூழலால் கல்லூரிச்சேர்க்கை பெறாதவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- கல்வியறிவு பெறாத பெற்றோர்களின் பிள்ளைகள் ‘முதல் தலைமுறை’ மாணவர்களாக கவனத்தில் கொள்ளப்படுவார்கள். நன்கு படிக்கும் ஆர்வம் உள்ளவர்களாக இருந்தால், இவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். நல்ல மதிப்பெண் எடுக்கும் திறன் இருக்கிற, பொருளாதார சிக்கலால் மட்டுமே மேல்படிப்பு பெற முடியாத மாணவர்களுக்கும் முன்னுரிமை உண்டு.
- மாணவர்கள் தங்கள் குடும்பச் சூழலை விளக்கி, பெற்றோர் செய்யும் வேலை, மேற்படிப்புக்கு உதவி கோரும் காரணம், படிப்பில் இருக்கிற ஆர்வம் முதலியவற்றை விளக்கி (குடும்பத்தின் எல்லா உறுப்பினர்களின் விவரங்களுடன்), தங்களின் கைப்பட அகரம் பவுண்டேஷனுக்கு விண்ணப்பத்தை எழுத வேண்டும்.
- இதை தலைமையாசிரியர் உள்ளிட்ட ‘பரிந்துரைக் குழு’ சரிபார்த்து மாணவரின் உதவிக்கு பரிந்துரை செய்து கடிதம் வழங்க வேண்டும். அதில் தலைமை ஆசிரியரின் கையெழுத்தும், முத்திரையும் அவசியம் இடம்பெற வேண்டும்.
- விண்ணப்பிக்கிற மாணவரின் பத்தாம் வகுப்பு மதிப்பெண் நகலை இணைக்க வேண்டும். பிளஸ் 2 காலாண்டு, அரையாண்டுத் தேர்வு மதிப்பெண்களையும் வகுப்பாசிரியரின் கையொப்பத்துடன் தனித்தாளில் எழுதி இணைக்க வேண்டும்.
- விண்ணப்பிக்கும் மாணவருக்கு ஒதுக்கப்பட்டுள்ள 2018–ம் ஆண்டின் பிளஸ் 2 பொதுத்தேர்வின் எண்ணை மறக்காமல் விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும்.
- மாணவரது பாஸ்போர்ட் அளவு புகைப்படம் (புகைப்படத்தின் பின்புறம் பெயரை எழுதவும்), குடும்ப அட்டை; சாதிச் சான்றிதழ்; வருமானச் சான்றிதழ்; ஆதார் அட்டை; பெற்றோரை இழந்த மாணவர் எனில், பெற்றோர் இறப்புச் சான்றிதழ்; மாற்றுத் திறனாளி எனில், அதற்குரிய சான்றிதழ்; அரசுப் பள்ளியில் பத்தாம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்கள், தங்களது மேல்நிலைக் கல்வியை தனியார் பள்ளியில் கட்டணச் சலுகையுடன் படித்திருந்தால், அதற்கான சான்றிதழ் என எல்லா சான்றிதழ்களின் நகல்களை மட்டுமே அனுப்ப வேண்டும்.

# தை திட்டம்

பள்ளிப் படிப்பிலிருந்து இடைநின்ற மாணவர்களின் எதிர்கால நலன்களைக் கருத்தில் கொண்டு, அகரம் ஃபவுண்டேஷன் கடந்த 2015-ம் ஆண்டு 'தை' திட்டத்தைத் தொடங்கியது. இந்த மாணவர்களை கைத்தொழில் திறன் வல்லுனர்களாக்கத் தேவையான பல்வேறு கைத்தொழில் மற்றும் திறன் வளர்ப்பு (Technical Skill Training) பயிற்சிகளை, தகுதி வாய்ந்த நிறுவனங்களுடன் இணைந்து தருகிறது அகரம். குடும்பச் சூழல் உள்ளிட்ட காரணங்களால் பள்ளிக் கல்வியைத் தொடர இயலாதவர்கள், தொடர்ந்து படிக்க விருப்பம் இல்லாதவர்கள், 'தை' திட்டத்தின்கீழ் உதவி வேண்டி விண்ணப்பிக்கலாம்.

- 18 முதல் 25 வயது வரையுள்ள மாணவ, மாணவிகள் விண்ணப்பிக்கலாம். வருடத்தின் எந்த மாதத்திலும் விண்ணப்பிக்கலாம்.
- விண்ணப்பதாரார் தன் குடும்பச் சூழலை விளக்கி, (பெற்றோர் செய்யும் வேலை மற்றும் குடும்பத்தின் எல்லா உறுப்பினர்களின் விவரங்களுடன்) விண்ணப்பம் எழுதவேண்டும். (இடைநின்ற மாணவர்கள் சார்பாக, வேறு நபர்களும் கூட விண்ணப்பங்களை அனுப்பலாம்)
- விண்ணப்பதாராரின் சுய விவரங்கள், தெளிவான தொடர்பு முகவரி மற்றும் தொலைபேசி எண் இருக்க வேண்டும்.
- மாணவரது பாஸ்போர்ட் அளவு உள்ள புகைப்படம் (புகைப்படத்தின் பின்புறம் பெயரை எழுதவும்), குடும்ப அட்டை நகல், வருமானச் சான்றிதழ் நகல், சாதிச் சான்றிதழ் நகல் ஆகியவற்றை விண்ணப்பத்தோடு இணைக்கவும்.
- உறையின்மீது 'அகரம் தை திட்டம்' எனக் குறிப்பிடவும்.

- தெளிவான கையெழுத்தில் மாணவரின் வீட்டு முகவரியும், தொலைபேசி எண்ணும் இடம்பெறுவது அவசியம். அகரம் பவுண்டேஷனின் தன்னார்வலர்கள் இருவர் தனித்தனியாக நேரில் வந்து பார்ப்பார்கள். விண்ணப்பத்தில் குறிப்பிட்ட தகவல்களில் தவறு இருப்பின், அந்த மாணவர் நிராகரிக்கப்படுவார்.
- 15.05.2018-க்குள் குறிப்பிடப்பட்டுள்ள இணைப்புகளோடு, தலைமையாசிரியரின் கையொப்பத்துடன் விண்ணப்பத்தை அனுப்பிவைக்க வேண்டும். உறையின்மீது 'அகரம் விதை திட்டம்-2018' எனக் குறிப்பிடவும்.






விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம் ஃபவுண்டேஷன், 15/7, கிருஷ்ணா தெரு,
தி.நகர், சென்னை-600017.
தொலைபேசி: 98418 91000/ 98416 85355 /
98409 99566

### தேர்வுக்குழுவின் கவனத்துக்கு:

- பள்ளித் தலைமை ஆசிரியரின் தலைமையில், இரண்டு வெவ்வேறு குரூப் பாடங்களைச் சேர்ந்த ஆசிரியர்களின் பரிந்துரையும் பெற்று தகுதியான மாணவர்களை விண்ணப்பிக்க வைக்க வேண்டுகிறோம். பரிந்துரைக் குழு தேர்ந்தெடுக்கிற மாணவர்கள் மட்டும் விண்ணப்பம் அனுப்பினால் போதுமானது. தலைமையாசிரியரின் ஒப்புதல் இல்லாமல் வருகிற விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படாது.
- அரசுப் பள்ளியில் படிக்கிற, முதல் தலைமுறையைச் சேர்ந்த, கிராமப்புற மாணவர்களுக்கு முன்னுரிமை அளித்து, 'படித்து முன்னேற வேண்டும்' என்ற கனவோடு நல்ல மதிப்பெண்களை இந்த பிளஸ் 2 தேர்வில் எடுக்கிற நம்பிக்கை நட்சத்திரங்களை தேர்ந்தெடுத்து அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். இரண்டு அல்லது மூன்று என்கிற எண்ணிக்கையில் மிகத்தகுதியான மாணவர்களைப் பரிந்துரைக்க வேண்டுகிறோம்.
- பெற்றோரை இழந்த மாணவர்கள், மாற்றுத் திறனாளிகள், வறுமையில் உழல்பவர்கள், படிக்கும் ஆர்வம் இருக்கிற பெண்கள் போன்றவர்களைத் தனியாகக் குறிப்பிட்டு பரிந்துரை கடிதம் அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.
- தொடர்பு எண் இல்லாத மாணவர்களுக்கு ஆசிரியரின் தொலைபேசி எண்ணோ அல்லது பள்ளியின் தொலைபேசி எண்ணோ வழங்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.



3,00,000+
STUDENTS DROPOUT EVERY YEAR
₹300/month
can
#changealife
AGARAM
FOUNDATION
TO DONATE
WWW.AGARAM.IN
+91 87545 65555

Yadhum Monthly - Registered with the Registrar of Newspapers for India under No. TNTAM/2016/69050. Day of Publishing: 01-01-2018



நம் குழந்தைகளின் எதிர்கால வாழ்வுக்கு
இந்த பூமியின் எதிர்காலமே ஆதாரம்!
இயற்கையை சிதைக்காத வழிகளில்
எரிசக்தியும் மின்சாரமும் பெறுவோம்!

**வீட்டைப் போலவே சூழலையும் பாதுகாப்போம்**




மதிப்பிற்குரியவர்களுக்கு...
RAMRAJ ©
காட்டன்

- வேஷ்டிகள்
- சர்ட்டுகள்
- பனியன்கள்

Shop online @ www.ramrajcotton.in
கம்பெனி ஷோரூம் மற்றும் முன்னணி ஜவுளி நிறுவனங்களில் கிடைக்கும்
Follow us RamrajCottonofficial ramrajcotton ramrajcottonmedia